# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஆடி மாதம் 4ந்- திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 25-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### புதிய பி. எஸ். சி. பட்டதாரி

ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. எக்ஸ். டி. எம். கொன்ஸ்ரன்ரின்அவர்கள் சென்னைச்சர்வகலாசாலை பி. எஸ். சி. பரீட்சையிலே முதலாவதுவகுப்பில் அரங்கேறியிருக்கிருரெனஅறிந்து சந்தோஷமானேம்.

### கார்மேல்கூட்ட ஜூபிலிவிழா

நம்முடையஆசனக்கோவிலைச்சேர்ந்த பக்திக்கூட்டங்களுள் ஒன்ருகிய பரிசுத்தகார்மேல்உத்தரியமாதா கூட்டத்தின் 50-ம்வருடதங்கயூபிலிவிழா குருநகரிலுள்ள கூட்டச்சிற்ருலயத்திலே முத்தினஉற்சவங்களுடன் நிகழும்ஆடிமாதம்21-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

### டக்றர்மாரின் மாற்றம்

வல்வெட்டித்துறை, இந்திராணி அரசினர்ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாய் இருந்துவந்த டக்றர் கே. தண்டாயுதபாணி அவர்கள் யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட இவரிடமாகப் புத்தளம் – சலாபம் சுகாதாரப்பிரிவிலுள்ள ஆனைமடுஆஸ்பத்திரியில் கடமையாற்றும்டக்றர் என். முத்துராசா வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர்ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டிருக்கிருர்.

### உருளைக்கிழங்குச்செய்கை

அரசாங்க கமத்தொழிற்பகுதியானது பரீட்சார்த்தமாக ரகன்கலை ஆராய்ச்சிநிலையத்தில் உருளைக்கிழங்கு செய்கைபண்ணிப் பெரும்வெற்றி கண்டிருக்கிறது. விதைக்கிழங்குகள் பிரித்தானியிலிருந்து தருவிக்கப்பட்டன. ஒருஏக்கரிலே உருளைக்கிழங்கு செய்கைபண்ண 2,500ரூபாசெலவாயிற்று. எல்லாமாக ஏழுஏக்கர்நிலத்தில் கிழங்குச்செய்கை நடைபெறலாயிற்று. 14தொன் கிழங்குவிளைந்தது. ஏக்கர்ஒன்றுக்கு 3,000ரூபா ஆதாயம்உண்டாயிற்றெனச் சொல்லப்படுகிறது.

### இலஞ்சம்வாங்கிப் பிடிபட்டவர்கள்

கல்விப்பகுதியைச்சேர்ந்த வித்தியாதரிசிஒருவரையும், லிகிதர்ஒருவரையும் உதவிவித்தியாதிபதி சென்ற திங்கட்கிழமை தற்காலிகமாக வேலைநீக்கஞ் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. கைலஞ்சம்வாங்கியதாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப் பட்டமையால் இவர்களை வேலைநீக்கஞ் செய்யவேண்டுமெனக் கல்விமந்திரி வற்புறுத்தினர். அதனல் வேலைநீக்கஅறிவித்தல் இருவருக்கும் தந்திமூலம் கொடுக்கப்படலாயிற்று. அன்றுமாலை4மணிக்குமுன் இருவரையும் வெளியேற்ருவிடின் தானே நேரில்சென்று அவர்களைத் துரத்துவதாகக் கல்விமந்திரிகூறினர். வித்தியாதரிசி சென்றவெள்ளிக்கிழமை கைலஞ்சம்வாங்கியபோது கையுங்களவுமாய்ப் பிடிபட்டனர். லிகிதர் நான்குமாதங்களுக்குமுன் அகப்பட்டார்.

### சப்பாத்துத் தொழிற்சாலை

வதிரியிலுள்ள கூட்டுறவுச் சப்பாத்துத்தொழிற்சாலைக்கு அரசாங்கம் 10,000ரூபா கடனைக்கொடுக்க முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத்தொழிற்சாலையில் செய்யப்படும்சப்பாத்துகளுக்கு அதிகதேவை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### வித்தியாதிபதி நியமனம்

1956-ம் ஆண்டு ஆடிமாதம் 1-ந் திகதிமுதல் தற்காலிக வித்தியாதிபதியாகக் கடமையாற்றிவந்த திரு. எஸ். எவ். டி சில்வா நிரந்தர வித்தியாதிபதியாகத் தற்போது நியமனஞ்செய்யப் பெற்றுள்ளார். வருகிறஆவணி 17-ந் திகதிமுதல் இவரதுநியமனம் நடைமுறைக்குவரும்

### பொலிசர் இடம்மாற்றப்பட்டனர்

மன்னர்ப்பொலிஸ் தலைமைக்காரியாலயஇன்ஸ்பெக்றர்அலெக்ஸ அபயசேகராஉட்பட மன்னர்ப் பொலிஸ்காரர்அனைவரும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். சமீபத்திலே அங்கு நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தைத் தொடர்ந்து அங்குள்ள பொலிஸ்காரரை இடம்மாற்றவேண்டுமென்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டார்கள்.

### விளையாட்டுச்சாமான் உற்பத்தி

தற்போது சுமார் இருபதுலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டுச்சாமான்களை வருடந்தோறும் பிறநாடுகளிலிருந்து இலங்கை இறக்குமதிசெய்து வருகின்றது. அதனல் இயந்திரசாதனங்களை உபயோகித்துப் பொம்மைமுதலிய விளையாட்டுச்சாமான்களைச் செய்யுந்தொழிலை ஆரம்பிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்கென ஜப்பானிலிருந்து நிபுணர் ஒருவர் இங்கு அழைக்கப்படுவாரெனத் தெரியவருகிறது. ஆரம்பத்தில் விளையாட்டுச்சாமான்களைச் செய்யும்நிலையம்ஒன்று கொழும்பிலும், பின்னர்வேறுநிலையங்கள் ஏனையபகுதிகளிலும் அமைக்கப்படும்.

### கிளிநொச்சியில் யாழ்தேவி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போகும்பொழுதும், அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும்பொழுதும் 'யாழ்தேவி' இம்மாதம் 8-ந்திகதிமுதல் கிளிநொச்சி றெயில் வேஸ்றேஷனில் நிறுத்தப்படுமெனத் தெரியவருகிறது. யாழ்தேவியைக் கிளிநொச்சியில் நிறுத்தவேண்டுமெனக்கேட்டுக் கிளிநொச்சிவாசிகள் 700 பேரின் கையொப்பங்களுடன் அரசாங்க போக்குவரத்துச் சேவையின் நிரந்தரகாரியதரிசிக்குச் சமீபத்தில் ஓர்மனு சமர்ப்பிக்கப்படலாயிற்று. 'யாழ்தேவி' கிளிநொச்சியில் நிறுத்தப்பட்டபோதிலும் நேரஅட்டவணையில் எவ்விதமாற்றமும் இருக்க மாட்டாது.

### புதிய பி. ஏ. பட்டதாரி

திருச்சி, திருச்சிலுவைக் கன்னிகாமடத்துச் சர்வகலாசாலைக் கல்லூரியிலே கற்றுவந்த செல்விபெனடிக்ற் அம்மாபுஷ்பம் சென்னைச்சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் அரங்கேறியிருக்கிருரெனஅறிந்து சந்தோஷமானேம். இவர் நமதுபட்டணப்பெருந்தெருவிலுள்ள சில்லாலை முத்துவைத்தியசாலைஅதிபரான ஆயுள்வேதவைத்தியர் ஏ. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் இரண்டாவதுபுதல்வியாவர். இவரின்மூத்தசகோதரியான செல்வி அன்னறெஜிஞஅம்மாவும் அதேகல்லூரியில்தானேபயின்று இற்றைக்குஇருவருடங்களின்முன் பி. ஏ. பரீட்சையில் அரங்கேறியுள்ளார் என்பதும்ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

### பிரதமரும் புத்தபிக்குகளும்

கொழும்பிலே வித்தியோதய பிரிவெனவில் பிக்குகள்ஐக்கியமுன்னணியின் ஆதரவில் பிக்குகளின்கூட்டம் ஒன்று நடைபெறலாயிற்று. ஆயிரம் பிக்குகளுக்குமேல் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். அதிலே பிரதமர் பண்டாரநாயகா பேசியபோது: இலங்கையின்ஐக்கியத்தைப் பாதுகாத்துச் சமாதானத்தைநிலைநாட்டத் தமக்கு உதவிசெய்யுமாறு அவர்களுக்கு ஓர்வேண்டுகோள் விடுத்தார். "சிங்களமாகாணங்களில் சமாதானத்தை நிலைநாட்டுவதாகப் பிக்குகள் தமக்குவாக்களித்தால் தாம்வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் சமாதானத்தைநிலைநாட்ட வாக்களிப்பதாகத் தெரிவித்துக்கொண்டார். சிங்களத்துக்கு உரியஇடத்தைக் கொடுப்பதன்றித் தமிழர்களை அடிமைப்படுத்துவதோ, அவர்களின்மொழி, கலாசாரம் ஆதியவைகளைஅழிப்பதோ தமது நோக்கமல்லவென்றும் அவர்கூறினராம்.

### இனிமேல் வீட்டுப்பாடம்இல்லை

ஆரம்பவகுப்புகளில் படித்துவரும் மாணவர்கள் வீட்டிலும் சிலபாடங்களைப்படித்தும், எழுதிக்கொண்டும் வரவேண்டுமென்று இனிமேல்ஆசிரியர்கள் உத்தரவிடக்கூடாதென வித்தியாதிபதி எவ். டி சில்வா பாடசாலைகளின் அதிபர்களுக்கெல்லாம் விடுத்துள்ள ஓர்அறிக்கையில் தெரிவித்திருக்கின்ருர். மாணவர்கள் வீட்டிலிருக்கும்போது தங்களுக்கு இஷ்டமானவைகளைப் படிக்கஅல்லதுஎழுத வசதியளிக்கப்பட வேண்டுமென்றும் அவர் தமதுஅறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ருர். ஆசிரியர்கள் இளம்மாணவர்களுக்கு மிதமிஞ்சிய வீட்டுப்பாடங்களைக் கொடுப்பதாலே அவர்கள் வீடுசேர்ந்ததும் அவைகளோடேயே நின்றுவிடுகிருர்களென்றும், ஏனையவிஷயங்களைக் கவனிக்கவோ, அன்றேல்விளையாடவோ அவர்களுக்கு நேரங்கிடைப்பதில்லையென்றும் பெற்றோர்பலரும் முறையிட்டிருக்கிருர்களாம்.

### மரத்தில்மோதியலொறி

வவுனிக்குளக் கமத்தொழிலாளர் படை முகாமைச்சேர்ந்த லொறி ஒன்று சென்றஞாயிற்றுக்கிழமை ஓர் மரத்தில்மோதி விபத்துக்குள்ளான போது அதிற்சென்ற 40பேரில் ஏழுபேர் படுகாயமடைந்தார்கள். காயமடைந்தவர்களைக் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குத் துரிதமாகக்கொண்டு செல்லக் கிராமவாசிகள் பெரும்உதவி புரிந்தார்கள். வின்சென்ட் பெறேரு, எஸ். விஜயரத்னஎனுமிருவரும் அங்கிருந்து யாழ்ப்பாண அரசினர்பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்களின்நிலைமை அபாயகரமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. லொறிச்சாரதியும், இந்தத்தொழிலாளருக்குப் பொறுப்பாளியான அதிகாரியும் காயமடையாது தப்பிக்கொண்டார்கள்.

### வெலிமடை உபதேர்தல்

பாராளுமன்றத்திலே வெலிமடைப் பிரதிநிதியாய்இருந்துவந்த திரு. கே. எம். பி. இராஜரத்தின தனதுபதவியை இழந்தமையாலே தற்போது காலியாயிருக்கும் அந்தஸ்தானத்துக்கு அபேட்சகராக முன்வந்திருப்பாருள் அவருடையமனைவியான திருமதி இராஜரத்தினவும் ஒருவராவர். மருதானை, அரசினர் மத்தியபாடசாலையில் ஓர்ஆசிரியையான இவர் தேர்தலில் போட்டியிடவிருப்பதை முன்னிட்டுத் தனது ஆசிரியத்தொழிலை இராசிநாமாச் செய்திருக்கின்ருர். தமிழின்நியாயமான உபயோகம்பற்றிப் பிரதமர் நான்குஅம்சத்திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதால் இவர் அரசாங்ககட்சியில்சேராது சுயேச்சையாகப் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்ருர். தனது நான்குஅம்சத்திட்டத்தைப் பிரதமர் கைவிட்டால் அக்கட்சியில் தான்சேருவது பற்றிப் பிறகுஆலோசிப்பதாக இந்த அம்மையார் கூறுகின்ருர்.

### காலநிலை

காற்று புசலைப்போன்று உக்கிரமாக இன்னுமேவீசிக்கொண்டிருக்கிறது. சென்றசெவ்வாய்க்கிழமை மைபிற்பகல் பெருங்காற்றுடன் சிறுமழைபெய்தது

---

### அனர்த்தங்கள் விளையும்

"பரஸ்பரநல்லெண்ணமும், சகிப்புத்தன்மையும், ஒத்துழைப்பும்இருந்தால் மொழிப்பிரச்சினையைச்சுமுகமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கமுடியும். விவேகமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுங்கொண்ட ஓர்பொதுவான சூழ்நிலை நிலவினல் இந்தச்சிக்கலான பிரச்சினைக்கு நிச்சயம்தீர்ப்புக்காணமுடியும். மொழிப்பிரச்சினையை எந்தவகையிலும் தீர்க்கத்தான் வேண்டும். இந்தப்பிரச்சினைக்கும், மனிதஉணர்ச்சிக்கும் நெருங்கியதொடர்பு இருக்கிறது. எனவே, இந்தப்பிரச்சினையைத் தீர்க்காமல் இந்தப்படியே விட்டுவைத்தால் பெரும்அனர்த்தங்கள் விளையக்கூடும்."

பிரதமர் பண்டாரநாயகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாசீர்நிறைந்த குடும்பம்

## துறவறஅந்தஸ்திலே ஐந்துசகோதரிகளும், இருசகோதரரும்

ஐக்கிய அமெரிக்கதேச கொனெக்ரிக்கட்மாகாணத்தைச்சேர்ந்த நியூஹாவென் நகர்வாசியான திரு. பிலிப் ஜால்பேட்அவர்கள் யாதுகூறுகின்றார்? "ஜால்பேட்குடும்பத்தினர் அதிகமாக ஒன்றுகூடுவதில்லை; கூடினாலும் மிக அருமையாகத்தான்; நானும், எனது எட்டுச்சகோதரர், சகோதரிகளும் ஓரேஇடத்தில் சந்தித்து எத்தனையோ வருடங்களாகிவிட்டன" எனக் கூறுகின்றார்.

சமீபத்திலே 21 வருடங்களுக்குப் பின் மூன்றுசகோதரிகள் இந்தியாவிலே நியூடில்லியில் ஒருங்குகூடினார்கள். இவர்கள் மூவரும் யேசுவினதும் - மரியாயினதும சபையிலே கன்னியாஸ்திரிமாராகக் கடமையாற்றி வருகின்றனர். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இவர்களின் சபைக்குச் சொந்தமாகப் 19 மடங்கள் உண்டு. ஏனைய இரு சகோதரிகளும் கனடாதேச மொண்றியல்நகர நோட்றேடாம்சபைக் கன்னியாஸ்திரிமாராய் இருக்கின்றனர். பிலிப்பின் ஒருசகோதரரான வண. அடிலேட் ஜால்பேட் சுவாமியார் கொனெக்ரிக்கட் மாகாணத்திலே பிறிஜ்போட்நகர் அர்ச். அந்தோனியார் கோவில் பங்குக்குருவாகக் கடமையாற்றிவருகின்றார். மற்றக் குருசகோதரரான வண. ஆர்தர் ஜால்பேட் சுவாமியார் றோமாபுரியிலுள்ள லா சலேத் குருமார்சபைப் பொதுஸ்ருதிபராய் விளங்கியிருந்தார். நியூ ஹாவென்நகரப் புகையிரதப் பகுதியில் "காட்"டாகக் கடமைபார்க்கும் பிலிப்பும், ஐக்கிய அமெரிக்கதேச ரெக்சாஸ் மாகாணத்திலுள்ள சான்ஸ்வோட் விமானதளத்தில் தொண்டாற்றும் வில்பிறெட்டுமாகிய இருசகோதரர்களுமே துறவறஅந்தஸ்தில் உட்படவில்லை.

### ஒன்றுக்குப்பதிலாக ஏழு

இவர்களின் தாயாரான காலஞ்சென்ற திருமதி வீ. ஜால்பேட்அம்மையார் மொண்றியல்நகர கன்னிகாமடமொன்றிலே நவகன்னியாஸ்திரியாகச் சேர்ந்து ஆறுமாசங்களின்பின் அழைத்தல்கிட்டாது வீட்டிற்குத் திரும்பிச்சென்று விவாகம் செய்துகொண்டார். இவர் ஓரேயொருகன்னியாஸ்திரியாய் இருப்பதற்குப்பதில் தனது ஏழுபிள்ளைகளைத் துறவறசீவியத்திற்குக் கையளித்தாரென்று பிலிப் சொல்லுகின்றார். ஜால்பேட்டின் குடும்பத்தினரைச்சேர்ந்தோராய்த் தற்போது 29 பேர் குருமார், கன்னியாஸ்திரிமாராய் இருந்துவருகின்றனரென்றும், இவர்களில் அதிகமானோர் கனடாவிலேயே இருந்துவருகின்றனரென்றும் அவர் கூறுகின்றார். எங்ஙனமாயினும் துறவறவாழ்க்கையில் உட்படாத ஜால்பேட் குடும்பத்தினரே தங்கள்வயசத்தை விருத்திபண்ண வேண்டுமென்பது அவர்கூற்று. இவருக்கு இருபுதல்வரும் ஒருபுதல்வியும் உண்டு. இவர்கள் மூவரும் இல்லறவாழ்க்கையில் உட்பட்டிருக்கின்றார்கள். அதனால் பிலிப் அநேக பேரப்பிள்ளைகளைக் கண்டிருக்கிறார்.

இவர்களின் தந்தையாரான காலஞ்சென்ற திரு. ஜால்பேட் 1887-ம் ஆண்டு கனடாவிலிருந்து ஐக்கிய அமெரிக்கதேச மசாசுஸெற்ஸ் மாகாணத்திலுள்ள ஸ்பென்ஸர்நகரில் குடியேறினார். இவர் 1890-ம் ஆண்டு மெய்விவாகஞ்செய்து நியூ ஹாவென்நகரில் தமதுகுடும்பத்துடன்சென்று 1919-ம் ஆண்டு தாம் மரிக்கிறவரையிலே மாவியாபாரஞ்செய்து தமது வாழ்க்கையை நடத்திவந்தார். திருமதி ஜால்பேட் 18வருடங்களில் பத்துப்பிள்ளைகட்குத் தாயாராகிப் 1948-ம் ஆண்டு தனது 81-ம்வயதில் மரணித்தார். மரணத்தின்போது அர்ச். சாமிநாதரின் மூன்றாஞ்சபைக்குரிய வெள்ளை அங்கியை இவருக்கு அணிந்தார்கள்.

கடைசியாக எப்போது தமதுசகோதரர், சகோதரிகளும், தாமும் ஒருங்கே சந்தித்தோமென்பது பிலிப் ஜால்பேட்டிற்கு ஞாபகத்திலில்லை.

இந்தச்சந்திப்பு 1909-ம் ஆண்டின் வருடப்பிறப்பா யிருக்கவேண்டுமென அவர் யூகிக்கின்றார். அன்று இவர்களின் மூத்தசகோதரியான சங். சிஸ்றர் சென் ஜெறோம் எமிலியென் தனது 17-ம் பிராயத்திலே சென் டெனிஸ் சர்-றிச்லு எனுமிடத்திலுள்ள கன்னிகாமடத்தில் பிரவேசித்த தினமாகும். ஓர் தையற்காரியான இவளின் இளைய சகோதரியான் மரியே என்பவ புறுக்லின்நகர "விலைமதித்தற்கரிய இரத்த" தாசர் சபையில்சேர்ந்து சுகவீனங் காரணமாக அதைவிட்டு வெளிகொண்டு மூன்று வருடங்களின்பின் தனது மூத்தசகோதரி சேர்ந்த மடத்தில் பிரவேசித்தார். இவவுடையநாமம் சங். சிஸ்றர் சம்மனசுக்களின் அர்ச். சூசையப்பர். சகோதரரான ஆதர் ஜால்பேட் லா சலேற் குருமடத்தில் 1909-ம் ஆண்டு பிரவேசித்து 1922-ம் ஆண்டு சுவிற்சர்லாந்திலே குருப்பட்டம்பெற்றார். இவர் நியூயோக் மாகாணத்தில ஒருகுருமடத்தில் 10 வருடங்களாக வேதசாஸ்திரங்கற்பித்துப் பின்னர் 1956-ம் ஆண்டு ஆனிமாதம்வரை பிரான்சிலும், இத்தாலியிலும் தங்கள் சபையின் பொதுஸ்ருதிபராகக் கடமையாற்றிவந்தார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய — கடும்பாவிகளையும், மூர்க்கரையும் மனந்திருப்பஉதவிய அர்ச். யோசேவ் கபாஸ்ஸோவின் சீவியவரலாறாகிய "வெளிச்சம் இருக்கும்போதே நடவுங்கள்" என்னும் புத்தகம் சென்ற வருடம் பிரசுரமாயிற்று.

### 22 வருடங்கட்குமுன்

இற்றைக்கு 22 வருடங்கட்குமுன் 5 ஜால்பேட் சகோதரிகள் நியூயோக் மாகாணத்திலே ஒருங்கு சந்தித்தார்கள். இந்தியாவிலே சென்ற 22 வருடங்களாக — அதாவது 11 வருடம் பம்பாயிலே கடமையாற்றிக் கடந்த 11 வருடங்களாகச் சிம்லா நகரில் கடமையாற்றிவரும் சங். சென் பார்பறா தாயார் இந்தியாவுக்குவரப் புறப்படுமுன் ஏற்பட்டசந்திப்பு இதுவாகும்.

சங். பார்பறாதாயார் யேசுவினதும் மரியாயினதும் சபையிற்சேர்ந்து 35 வருடங்கட்கு மேலாகிவிட்டது. சிலவருடங்கட்குமுன் ஒருவருடஓய்வு பெற்றுத் தமது தாய்நாடுசெல்லத் தாயாருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச்சபையில் சேர்ந்து பிறநாடுகள் சென்று கடமையாற்றும் மிஷனரிமாருக்கு இப்படிப்பட்டஅனுமதி காலாகாலத்தில அளிக்கப்படுகின்றது. ஆனால், தாயார் இந்தத்தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தமது தாய்நாடு சேர்ந்ததும் அங்குள்ளோர் தாம்திரும்பவும் இந்தியாவரவிடாது தடுப்பார்களென்ற பயமே இவ இவ்வாறு செய்வதற்குக் காரணமாயிற்று. இவவுடைய இருசகோதரிகளும், இவவும் தங்கள்சீவியகாலத்தின் எஞ்சியுள்ள பகுதியையும் இந்தியாவிலேயே செலவிடுவார்கள்.

சங். மேரி பேர்னதேத் தாயார் இந்தியாவுக்குவந்தமூன்றுசகோதரிகளுள் இரண்டாவதுசகோதரி. தாம் சபையிற் சேர்ந்த வெள்ளியூபிலியைச் சென்ற புரட்டாசிமாதத்தில் இவ கொண்டாடினா. இவ சென்ற 10வருடங்களாக இந்தியாவிலே மாரியம்புரத்திலுள்ள ஓர்வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றா.

இந்தியாவிற்குக் கடைசியாகவந்தவ சங். மேரி ஜேற்றூட்தாயார். இங்கு வருமுன் புறொங்ஸ்நகர அர்ச். அருளப்பரின் மடத்துச் சிரேஷ்டதாயாராயிருந்தா. தற்போது இருகன்னியாஸ்திரிமாருடன் இவ பாகிஸ்தானிலுள்ள மரியகெல் எனும்கிராமத்தில் ஒருமடமும், மருத்துவசாலையும் நடத்திவருகின்றா. இங்குள்ள மூன்று சகோதரிகளும் இடையிடையே ஒருவரைஒருவர் காணக்கூடியவர்களாய்இருப்பினும் இவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஏனையவர்கள் இவர்களை எக்காலமும் இனிக் காணப்போவதில்லையென்று எண்ண இடமுண்டு.

தாங்கள் தொண்டாற்றும் இடத்திற்கேற்க இவர்கள் ஹிந்தி, குஜராத்தி, உருதுப்பாஷைகளைப் பயின்றிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் "தன்னிஷ்டமாகச் சேவைசெய்யவந்த மிஷனரிமார்" என்று பிலிப் ஜால்பேட் சொல்லுகின்றார்.

துறவறசீவியத்தைத் தழுவுவோர் மாத்திரம் விசேஷவரப்பிரசாதங்களைக் கொண்டவர்கள் அல்லஎன்பது ஜால்பேட்டின்கூற்று. தனதுபிள்ளைகளுள் ஒருவரும் துறவறஅந்தஸ்தில் உட்படாவிட்டாலும் தனதுபேரப்பிள்ளைகளுள் ஒருவர் குருவாகக்கூடுமென்று நம்ப இடமுண்டென்று இவர்சொல்லுகின்றார்.

---

# அர்ச். சதாசகாயமாதா

(A. நம்பிக்கைராஜ், சென்னை)

நம் தேவதாயைப் பலபெயர்கள் கொண்டு அழைக்கிறோம். அவற்றில் ஒன்று "சதாசகாயமாதா" என்பதாகும். நம்தாயே இப்பெயரைத் தெரிந்துகொண்டாள். பெயர்பெற்ற தமதுபடத்தைவைத்து வணங்கும் பிரதான ஆலயத்தையும் அவள் தாமே தெரிந்துகொண்டாள்.

**படத்தின் வரலாறு:** 14-ம்நூற்றாண்டின்இறுதியில் வணிகன்ஒருவன் சகாயமாதாவின் அழகியபடம்ஒன்றை றோமாபுரிக்கு எடுத்துச்சென்றான். அங்கு ஒருவிதவியாதியால் அவன் பீடிக்கப்பட்டு இறந்தான். இறக்கும்போது, அப்படத்தை ஒருகோவிலில் சேர்க்குமாறு அவன் தனதுநண்பனாகிய ஓர் றோமனை வேண்டிக்கொண்டான். ஆனால், அந்த றோமனின் மனைவி அப்படத்தைத் தனதுஅறையில் வைத்துக்கொண்டாள். தேவதாய் அந்த றோமனுக்கு மும்முறைகாட்சியளித்து, படத்தை வெளியேஅகற்றச் சொல்லியும் கேளாததினால், நான்காம் முறை காட்சியளித்து, அவன் கீழ்ப்படியாததற்குத் தண்டனையாகப் பயங்கர வியாதியினால் பீடிக்கப்பட்டு மரணமடையச்செய்தாள். பின்னர்தேவதாய் அவனுடையமகளான ஆறுவயதுச் சிறுமிக்குத் தோன்றிப் படத்தை உடனே வீட்டிலிருந்துநீக்குமாறு தன் தாய்க்கும், பாட்டனுருக்கும்சொல்லக் கட்டளையிட்டாள். சிறுமியின்தாய் படத்தைநீக்க மனதாயிருந்தாலும், பக்கத்துவீட்டுக்காரியின் துர்ப்போதனையால் அதைநீக்க மறுத்துவிட்டாள். துர்ப்புத்திசொன்னவள் மாலையில் ஒரு பயங்கரவியாதியால் பீடிக்கப்பட்டதினால் மிகுந்த துக்கப்பட்டுப் பெரிய பொருத்தனையோடு அன்னையிடம்மன்றாடவே, அன்னை அவளுக்கு நற்சுகமளித்தாள். கடைசியாகத் தேவதாய் அச்சிறுமிக்கு ஒருகாட்சிகொடுத்து, அப்படத்தை அர்ச். மத்தேயுவின் ஆலயத்திற்குக் கொடுக்குமாறு உத்தரவிட்டாள். அவ்வாறே அப்படம் 1699-ம் ஆண்டு பங்குனிமாதம் 27-ந்திகதியன்று அவ்வாலயத்தில் சேர்க்கப்பட்டது.

1798-ம் ஆண்டு நெப்போலியன் றோமைநகர்மீது படையெடுத்தபோது சுமார் 30கோவில்கள் சேதமடைந்தன. இவற்றிலே அர்ச். மத்தேயுவின் ஆலயமும் அதிகம்சிதைவுற்றது. அப்பொழுது அந்தஆலயத்தைக் கண்காணித்துவந்த அர்ச். அகுஸ்தீன்சபைக் குருமார் தேவதாயின் புனிதபடத்தை அந்நகரிலுள்ள அர்ச். எவுசேபியுஸ் ஆலயத்திற்கு மாற்றினார்கள். 67 வருடங்களுக்கு இப்படத்தைப்பற்றியவிபரம் தெரியவில்லை. 1866-ம்ஆண்டு சித்திரைமாதம் 26-ந்திகதி இரட்சகர் சபைக்குருமார் பரிசுத்தபாப்பானவரின் அங்கீகாரம்பெற்று இந்தப் புனிதபடத்தை அர்ச். மத்தேயுவின் ஆலயத்தில் மீண்டும்ஸ்தாபித்தனர். அதுமுதல் இத்தேவாலயம் உலகப் புகழ்பெற்று விளங்குகிறது. இதைப்போல் லட்சக்கணக்கானபடங்கள் அச்சிட்டு உலகமெங்கும் விநியோகிக்கப்பட்டன. 15-ம் ஆசீர்வாதப்பாப்பானவர் சதாசகாயமாதாவின்திருநாளை ஆனிமாதம் 24-ந்திகதிக்குமுன்வரும் ஞாயிறன்று இரட்சகர்சபையார் கொண்டாடும்படி அனுமதியளித்தார்.

நம் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை தேவதாயை மகிமைப்படுத்துவதற்காக ஒவ்வொருமாதத்திலும் ஒரு திருநாளையாவது கொண்டாடுகிறது. வாழ்க்கையின் முக்கியபாகத்தைத் தெரிந்துகொள்பவர்களுக்கு ஆனிமாதம்முக்கியம். இம்மாதத்தில் நாம் அர்ச். சதாசகாயமாதாவின் திருநாளைக் கொண்டாடுகிறோம். தேவஅழைத்தல் பெறவிரும்பும்மாணவர் மாணவிகள் நம் தாயைவேண்டினால் வெற்றிநிச்சயம்.

**படத்தின் விளக்கம்:** இப்படம் பார்வைக்குமிகஅழகானது. இதிலே எழுதியுள்ள எழுத்துகள் கிரேக்கஎழுத்துகளாகும். படத்தின் வலதுகோடியிலுள்ள M. P. என்ற எழுத்துகளுக்கு 'அன்னை'என்று அர்த்தம். இடதுகோடிஎழுத்துகள் 'கடவுள்.' ஆகவே, "கடவுளின் அன்னை" என்றுஆகும். வலப்பக்கத்திலுள்ள இரண்டாவதுகூட்டெழுத்து அதிதூதரான அர்ச். மிக்கேலையும், இடதுபக்கத்திலுள்ள இரண்டாவதுகூட்டெழுத்து அதிதூதரான அர்ச். கபிரியேலையும் குறிக்கும். குழந்தையின் இடதுபக்கத்து எழுத்துகள் "யேசுக்கிறீஸ்து"என்று பொருள்படும்.

அதிதூதரான அர்ச். மிக்கேலும், கபிரியேலும் தயாத்துடன் குழந்தை யேசு பின்னால் அனுபவிக்கவிருக்கும் பாடுகளைத் தெரிவிக்கின்றனர். அர்ச். மிக்கேல்சம்மனசு ஈட்டி, கடற்காளானை முனையில்கொண்ட ஒருகோல் இவைகளை ஒருகலயத்திலும், அர்ச். கபிரியேல் சிலுவையையும் குழந்தையேசுவுக்குக் காண்பிக்கின்றனர். இதைக் கண்ட குழந்தையேசு பயத்தால் வெருட்சிகொள்ளுகிறார். அவருக்குண்டானபயத்தால் ஒருகாலின் பாதரட்சைமுதலாய் அவிழ்ந்துவிடுகிறது. பயத்தால் தமதுதாயின் இருகரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுகிறார். தாயும் தமதுமகனைத் தமதுபக்கம் அணைத்துக்கொள்ளுகிறாள். திருக்குழந்தையின் துக்கத்தைப்பார்த்த தாய் மிகுந்தவியாகுலம் அனுபவித்தாள். மகனின்பாடுகளில் அவளும் பங்குபெறுவாள் அல்லவா! அவள்தன் குழந்தைக்கு ஆறுதல் கூறுகிறாள். குழந்தையும் அவள்பேச்சைக் கேட்கிறது. அவளுக்கு அக்குழந்தையின்மேல் அதிகஅன்பு. அவள் அன்பும் நிரந்தரமானது. தேவகுழந்தையின் சகோதரரானநமக்கும் அவள்தாயல்லவோ? தாயின்அன்பிற்குச் சந்தேகமுண்டோ? நாமும் நமதுஆத்தும, சரீர அவசியங்களில் தேவதாயிடம் செல்வோமாக. அவள் நித்தியஉபகாரி. ஆதலால், நமக்குக்கட்டாயம் உதவிசெய்வாள்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பதினெட்டுவருட ஆளுகையிலும்

சரித்திரத்திலே மற்றெந்தப் பாப்பானவரைக் காட்டிலும் 12-ம் பத்திநாத பாப்பரசர் அதி பெருந்தொகையான மக்களுக்குப் பேச்சுகள்நிகழ்த்தி யிருக்கிருரென்று அமெரிக்க சர்வகலாசாலைச் சரித்திரப்பேராசிரியர்கள் இருவரால்பிரசுரஞ்செய்யப்பெற்றிருக்கும் திருச்சபைச்சரித்திரம் என்ற புதியநூலிலே எழுதப்பட்டிருக்கிறது. பாப்பரசராகத் தமது ஞானஆளுகையின் பதினெட்டுவருடகாலத்திலும் பரிசுத்தபிதா பிரத்தியேகபேட்டிகளிலும், பிரசித்தபேட்டிகளிலும் 1 கோடியே 50 லட்சம்மக்களுக்குப் பேச்சுகள்நிகழ்த்தியிருக்கின்றுர். அவரது பேச்சுகள் சர்வதேசசட்டம், வைத்தியம், பிரசவவைத்தியம், அணுக்குண்டு, தற்காலவிஞ்ஞானம், பிரயாணம், குற்றத்தையும் குற்றவாளிகளையும் நடத்தும்முறைஎன்பன உட்பட எண்ணிறந்தவிஷயங்கள்பற்றியனவாகும்.

### பிரியாவிடைபெற்ற கருதினல்

போலாந்தின் திருச்சபைமேலதிகாரியான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர் ஆறுவாரகாலம் ரோமாபுரியிற் தங்கியிருந்து போலிஷ் திருச்சபைப் பிரச்சினைகள்பற்றிப் பரிசுத்த பாப்பரசருடனும், வத்திக்கான் அதிகாரிகளுடனும் கலந்துவிவாதித்தபின் அன்றுதிங்கட்கிழமை அந்நகரிலிருந்து போலாந்துக்குப் பிரயாணமாயினர். போலிஷ்மேற்றிராணிமார் மூவர் சமேதராய் அவர்புகையிரதத்தில் ஏறியபோது, சனக்குழாங்கள் ஆர்ப்பரித்து அவரை வாழ்த்தி நின்றன. அவரும் அவர்களுக்குப் பிரியாவிடைஆசிவழங்கினர். இதற்கு நான்குதினங்களின்முன்னரே நாற்பதுநிமிஷ அந்தரங்க பேட்டியின்போது அவர் பாப்பரசரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். அதற்குமுன் ரோமாபுரியிலுள்ள போலிஷ்குருத்துவ மாணவர்கள் பாப்பரசரது பேட்டி பெற்றுக்கொண்டபோது அரிதாகவேசம்பவிக்கும் சிலதைக் கண்டார்கள். அவர்களுக்குச் சொற்பொழிவுநிகழ்த்தியபோது, பரிசுத்தபிதா கண்கலங்கி நின்ற காட்சி பெரிதும் உருக்கமான ஓர் காட்சியாயிருந்தது.

### உங்கள்புத்திரர் காண்பார்கள்

போலாந்தின் திருச்சபைமேலதிகாரியான கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர் ரோமாபுரியிலுள்ள போலிஷ்கோவிலான அர்ச். ஸ்ரனிஸ்லாஸின்ஆலயத்தில் நிறைவேற்றிய தம்முடைய முதலாவது பகிரங்கதிவ்வியபூசையில் செய்த பிரசங்கத்தில், தங்கள் சுவநாட்டினின்றும் வெளியேறியுள்ள போலிஷ்அகதிகள் குழுவொன்றை நோக்கி, "நீங்கள் எல்லாரும் போலாந்துக்குத் திரும்பிப்போக முடியாதபோதிலும் உங்கள்பிள்ளைகள் நிச்சயமாகவே தங்கள்நாட்டினைத் திரும்பவும்காண்பார்கள்" எனக் கூறலாயினர். "தேவசித்தத்தால் உலகின் ஓர் கொத்தளம்போன்று ஏற்படுத்தப்பட்டுள்ள எமது தாய்நாடு வாழத்தான்வேண்டும்; நமது இடமாகப் 19-ம்நூற்ருண்டிலே பிரதாபத்துடன் பதவிவகித்திருந்த அந்தப்பெரிய கருதினல் லெடோச்சோஸ்கி ஆண்டவர் மார்பில்அணிந்திருந்த திருக்குருசை லெடோச்சோஸ்கி குடும்பத்தினரால் நாம்அருளப்பெற்றிருக்கிறோம்; நம்மைப்போலவே அவரும் சிறைவைக்கப்பெற்ருர்" என்றும் கருதினலாண்டவர் அங்கு கூடியிருந்த 500 பேரின் சமுகத்தில் கூறிநின்றுர்.

### கடைசியான போலிஷ்குருமார்

சமீபத்திலே ஹொங்கோங் போய்ச்சேர்ந்த ஹெயின்றிச் ஜெசென்என்னும் தென்மார்க் கப்பலிலே கம்யூனிஸ்தசீனுவிலிருந்து வெளியேறிய கடைசியான இருபோலிஷ்குருமாரும் இருக்கக்காணப்பட்டனர். 74 வயதுடைய வண. அலெக்சான்டர் எய்ஸிமொண்ற் சுவாமியாரும், 52 வயதுடைய வண. கிறேஷன் கொலட்சியேசிக் சுவாமியாருமே அவ்விருவருமாவர். இருகுருமாரும் முன்னறிவித்தல் யாதுமறியே மஞ்சூரியாவைச்சேர்ந்த ஹார்பின் நகரிலிருந்து ஹொங்கோங்போய்ச் சேர்ந்தனர். வண. எய்ஸிமொண்ற் சுவாமியார் அங்கு 45 வருடம் தொண்டாற்றியிருக்கிருர். இற்றைக்குப் 17வருடங்களின் முன் கம்யூனிஸ்தசேனை சீனுவைஅடிப்படுத்தியபோது இந்தக்குருமார் இருவரும் ஹார்பின்நகரிலேயே இருந்துவரும்படி கட்டுப்படுத்தி விடப்பட்டனர். ஆயினும் கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள "முன்னேற்ற கிறீஸ்துவசபை"யில் சேரமறுத்துவிட்டமையால் தங்கள்கோவிலைவிட்டு வெளியேறிவிடுமாறு சென்றபங்குனி மாதம் பலவந்தஞ்செய்யப்பெற்ருர்கள்.

### கருதினலாண்டவரும் காரியதரிசியும்

ஹங்கேரியிலே அமெரிக்க தூதுவராலயத்தில் சென்றகார்த்திகைமாதம் சரண்புகுந்து அங்குதானே இன்னமும் சஞ்சரித்து வருகிறவரான கருதினல் மின்ட்சென்றிஆண்டவரின் காரியதரிசியான வண. ஈகன் ரேர்க்சனி சுவாமியார் கைதுசெய்து, சிறைவைக்கப்பட்டிருக்கிருரென புடாபெஸ்ற்நகர கம்யூனிஸ்த பத்திரிகைஒன்றில்செய்திவெளியாயிருக்கிறது. கடந்த சிலமாதங்களாகக் ஹங்கேரிய கம்யூனிஸ்த பத்திரிகைகள் இவரைத் தாக்கிவரலாயின. ஆயுதபாணிகளான ஆறுபேரின் குழுவொன்றுக்குத் தலைமைவகித்திருந்தாரென இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அரசியற்புரட்சிக் கலகத்தின்போதும், அதனைத்தொடர்ந்தும் நாட்டைவிட்டுவெளியேறிய ஹங்கேரியஅகதிகளுக்குப் பிரசாஉரிமை இல்லாமற்போகச்செய்யும் புதிய சட்டம்ஒன்று ஹங்கேரியபாராளுமன்றத்தில் அரங்கேறியிருக்கின்றது. இந்தச்சட்டத்தின்கீழ் கருதினல் மின்ட்சென்றிஆண்டவரையும்கொண்டுவருதற்கான முயற்சி தற்போது நடைபெறுகின்றது. லாஜொஸ் டின்னியெஸ் என்ற முன்னைநாள் கம்யூனிஸ்த பிரதமரே இந்தஆலோசனையைக்கூறியவர். சுவநாட்டில் இருந்துகொண்டுதானே அங்குள்ள தூதுவராலயங்களில் விசேஷநாட்டுரிமை பெற்றிருக்கிறவர்களுக்கும் பிரசாஉரிமை ஒழிக்கப்படவேண்டுமென்பதே இவர் கூறியுள்ள ஆலோசனையாகும். இது நடைமுறைக்குவருமாஞல் கருதினல் மின்ட்சென்றிஆண்டவர் ஒருவர் மாத்திரமே பிரசாஉரிமையை இழந்துபோவார்.

### றீத்தம்மாளின் நூற்ருண்டுவிழா

அசாத்தியமான காரியங்களின் விசேஷசலுகைக்காரியென அகில முழுவதும் கொண்டாடப்படுகிறவளான காசியாநகர் அர்ச். றீத்தம்மாள்பரமபதமடைந்த 500-ம் ஆண்டு ஞாபகார்த்தமாகச் சமீபத்தில் நடைபெற்ற கொண்டாட்டத்திலே பல்லாயிரக்கணக்கான இத்தாலியர்கள் றொக்காப் பொறேறை எனுமிடத்திலிருந்து காசியாநகருக்குநடந்தேறிய ஊர்வலம் ஒன்றில் மிகப்பெரிய றோசாப்புஷ்பச்செண்டுகளைக் கொண்டு செல்லலானுர்கள். பன்னிரு வயதில் திருமணஞ் செய்து, பதினெட்டு வருடங்களின்பின் விதவையான அர்ச். றீத்தம்மாள் ஈற்றில் அகுஸ்தீனுரின் கன்னிகாசபையில் சேர்ந்து ஓர் கன்னியாஸ்திரியாயினுள். இந்த றோசாப்புஷ்பங்கள் இவ்வர்ச்சியசிட்டவளின் "றோசாப்புஷ்ப அற்புத"த்தைப் பிரதிபலிக்கலாயின. இந்தஅற்புதம் 1457-ம் ஆண்டின் கடுங்குளிர்காலத்திலே அவள் மரணிப்பதற்குச் சில மாதங்களின்முன் நடந்தேறியது. காசியாவிலுள்ள அகுஸ்தீனுர் கன்னிகாமடத்திலே தன்னைக் காணவந்த தனது சுற்றத்தவளான ஒருபெண்ணை நோக்கி அங்கிருந்து இரண்டுமைல் தூரத்திலுள்ள றொக்காப் பொறேறைஎனுமிடத்திலுள்ள ஓர்பழையமனைக்குச்சென்று, அதன்தோட்டத்திலிருந்து தனக்கு ஓர்றோசாப்புஷ்பம் கொண்டுவருமாறு கேட்டுக்கொண்டாள். அந்தஉறவினளோ அதுகிடைப்பதுபற்றிப் பெரிதும் சந்தேகங்கொண்டாலும் அங்கு புறப்பட்டுச்சென்று அர்ச்சியசிட்டவள்குறிப்பிட்ட அதேஇடத்தில் சிறந்த ஓர் றோசாமலர் புஷ்பித்திருப்பதைக்கண்டு அதனைக்கொய்துசென்று அவளுக்குக் கொடுத்தாள். ஊர்வலம் காசியாவைச் சேர்ந்தபோது அதிலேகொண்டு செல்லப்பட்ட றோசாப்புஷ்பச் செண்டுகள் கருதினல் கனலி ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படலாயின.

### ஸ்பானியரும் வேதாகமும்

ஸ்பானியமக்கள் வேதாகமத்தைவாசியாது தடைசெய்யப்பட்டுள்ளனரென்று சிலநாடுகளிலே புறெட்டஸ்தாந்தர்கள் பேசிக்கொள்வதுவழக்கம். அவ்வாருக, எய்ஜோமேற்றிராணியாரின் ஆதரவில் சமீபத்தில்நடைபெற்ற "பைபிள்வார"த்திலே சுமார் 2,00,000புதியஏற்பாட்டுப் பிரதிகள் மதிரித்நகர்வீதிகளில் விற்கப்படலாயின. இருதினங்களிலே விசேஷபதிப்புகளில் ஒவ்வொன்றும்நான்குபென்சாக 60,000பிரதிகள் விலைப்படலாயின. புதியஏற்பாட்டிலே10,000 பிரதிகள் நகரிலே வறியவர்கள் சஞ்சரிக்கும் பகுதிகளிலுள்ள விசாரணைப்பங்குகளுக்கு எய்ஜோமேற்றிராணியாரால் வழங்கப்பட்டன.

### மனந்திரும்பிய பாதிரியார்

தென்மார்க்நாட்டிலே முதன்மைவாய்ந்த ஓர்லுத்தேர்சபைப் பாதிரியாரான 51வயதுடைய கனம். சிக்பிறெட் றிகூஜ்காட் அவர்கள் அங்கே ஆபென்ருஎனுமிடத்தில் தாம்வகித்திருந்த சபைப்பதவியை இராசினாமாச் செய்து ஓர் கத்தோலிக்கராகியிருக்கின்றுர். இரண்டாவதுஉலகயுத்தம் நடந்தகாலத்திலே இவர் நாஸிகளால் நியூவென்காம்எனுமிடத்திலுள்ள கூட்டடைமுகாமிலே சிறைவைக்கப்பட்டிருந்தபோது கத்தோலிக்க சமயத்தின்மட்டில் எடுத்துக்கொண்ட கரிசனை காரணமாக மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்து கொள்ளலாயினர்.

### விமானியான குருவானவர்

இரண்டாவது உலகயுத்தத்திலே அமெரிக்க பறக்குங்கோட்டை விமானம்ஒன்றைச் செலுத்திய ஓர் இளங்குருவானவர் கடவுள்பக்கமாக ஆன்மாக்களை வெற்றிகொள்ளும் ஞானப்போராட்டம்ஒன்றிலே மேற்குஆபிரிக்காவின்மேலாகச் சிறியவிமானம் ஒன்றைச் செலுத்தவிருக்கின்றுர். இற்றைக்கு இருவருடங்களின் முன் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற வண. ஊர்பன் கொஸ் என்ற இந்தக்குருவானர் நைஜீரியாவைச்சேர்ந்த சொகோட்ரோ மாகாணத்தில் குசோஎனும்பகுதியில் திருத்தொண்டாற்றக் குறிக்கப்பட்டிருக்கின்றுர். இவரின்சேவை சுமார் 15 லட்சம்மக்களை மனந்திருப்புவதேயாகும்.

### இடம்பெயருங் கோவில்கள்

தென்னுபிரிக்காவிலே ஜொகானெஸ்பேர்க்நகரிலும், அதனைச் சூழவரவும் கோவில்கள்கட்டுவதற்கென்று சிலஇடங்கள் நகர அதிகாரிகளால் ஒருவருடத்துக்கு மாத்திரம் குத்தகையில்கொடுபட்டிருக்கின்றன. இந்தநிலைமையைச் சமாளிப்பதற்கென்று அந்நகர பொயில்மேற்றிராணியார் சமயோசிதமாகப் பயன்படக்கூடியனவும், செலவில்குறைந்தனவும், ஒருவருடம் பூர்த்தியானதும் வேற்றிடங்களுக்கு இடம்பெயர்க்கக் கூடியனவுமான பத்துக்கோவில்களைக் கட்டுகின்றுர். இவற்றில் மூன்ருவதுகோவில் வன்டர்பிஜில்பாக்கத்திலே திறக்கப்பட்டுள்ளது. 2,000பவுண் செலவுசெய்து கட்டப்பெற்ற இந்தக்கோவில் 750பேரைஅடக்கக்கூடியது. இன்னும்கட்டப்படவேண்டிய ஏழுகோவில்களும் இதேமாதிரியாகத்தான் இருக்கும்.

---

● வத்திக்கான் சோதிமண்டல அவதான நிலையத்திற்கென்று பரிசுத்தபாப்பரசர் இங்கிலாந்திலே குல்ஸ்டன் எனுமிடத்திலுள்ள ஹார்கிறீவ்ஸ் — தொம்சன்என்ற பிரித்தானிய கம்பெனியிடமிருந்து 15 தொன் நிறை கொண்ட சிமிட்ற் தூரதிருஷ்டிக் கமரு ஒன்றை விலைகொடுத்து வாங்கியிருக்கின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

**பொதுக்கருத்து:** அணுச்சக்தி அமைதியான முறையில் ஆக்க வேலைக்குமாத்திரம் பயன்படுமாறு வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** ஓசியானியா தீவுகளில் உழைக்கும் வேதபோதகர்களுக்காக மன்றுடிக்கொள்வது.

சத்தியவேத

பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
ஆடி மாதம் 4-ந் திகதி

# மொழிப்பிரச்சினை

இன்று மொழிப்பிரச்சினையே மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்ந்துள்ளது. இந்தமொழிப் பிரச்சினை இவ்வளவு தூரம் படுமோசமான நிலையை அடையுமென்றும், வகுப்புஒற்றுமையை இவ்வளவு தூரம் பாதிக்குமென்றும் அப்போது எவருமேகருதவில்லை. சிங்களம்மட்டும் சட்டத்தைக்கொண்டுவந்து அரங்கேற்றிவிட்டதோடு மொழிப்பிரச்சினை தீர்ந்துவிடவில்லையென்பதை அரசாங்கம் தற்போதுநன்ருக உணரத் தொடங்கியிருக்கிறது. மக்களின் முன்னேற்றத்தையும், சுபீட்சத்தையும் கருதி இந்த மொழிப்பிரச்சினையை முந்தத் தீர்க்கவேண்டும்; இன்றேல் பெரும் அனர்த்தங்கள்தான் விளையுமென்ற உணர்ச்சி அதற்குப் பிறந்துதான் இருக்கிறது. ஆனல், தமிழ்ப்பேசும்மக்களின் கௌரவத்துக்கும், அந்தஸ்துக்கும், சுயமரியாதைக்கும் பாதகமான எந்தஒருமுடிபும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதன்று. தனிச்சிங்களசட்டம் தமிழர்களுக்குப் பாதகமானதல்ல; தமிழர்களை அடிமைப்படுத்தி அடக்கியாளும் உத்தேசமோ அன்றேல் சிங்களவர்களைவிடத் தமிழர்கள் அந்தஸ்தில் குறைந்தவர்களெனக்கருதும் எண்ணமோ அரசாங்கத்துக்குக் கிடையாது; தமிழ்ப்பேசும்மக்களைத் தாழ்ந்த சாதியினராகக் கருதாமல் சரிசம அந்தஸ்துடன் வாழச்செய்ய வேண்டுமென்பதே அரசாங்கத்தின்விருப்பம் என்றெல்லாம் பிரதமர் தேன்போல மிகஇனிமையாக மொழிகின்ருர். அங்ஙனம் மொழிகின்றபிரதமர் சமஷ்டிக் கட்சித் தலைவர்களுடன் நடத்தத் தொடங்கியுள்ளபேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியவேண்டும்என்பதே எல்லோரதும் இன்றையவிருப்பமாகும். விவேகமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுங்கொண்ட பொதுவான ஓர்சூழ்நிலையினுல் சிக்கலான இந்த மொழிப்பிரச்சினையை நிச்சயமாகத் தீர்த்துவிடலாம். ஆனல், உண்ணுவிரத இரட்டையர்களான இராஜரத்தின - ஜயசூரியாபோன்ற சிங்கள தீவிரவாதிகளும், தமிழர்களிலேவிலாங்குபோன்றவர்களும் இதற்குமுட்டுக்கட்டையிட முன்வரலாம். எமதுநாடு இன்றுபோல ஒரு நெருக்கடியானநிலையை என்றுமே கண்டதில்லைஎனலாம். இந்த நெருக்கடிக்குக் காரணர்யார்? சிங்களம்மட்டும் சட்டத்தைத் தமது கட்சியின் பெரும்பான்மைப்பலத்தைக்கொண்டு அரங்கேற்றிவைத்த பிரதமரே. அதனுல் அவரே தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்குப் பரிகாரங் காணவேண்டும். சிங்களம்மட்டும்சட்டம் தமிழரை இழிவுபடுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டமெனக் கருதுவாரும், பகிரங்கமாகப்பேசுவாரும் தமிழ்மக்களில் அநேகர்உண்டென்பதை அவர் நன்கறியவேண்டும். மொழிப்பிரச்சினையை அரசியற்கட்சிகளின் பிரச்சினையாகவல்ல, ஓர் தேசீயப்பிரச்சினையாக அவர் கருதவேண்டும். பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பாதுகாப்பதைமுன்னிட்டுச் சிங்களம்மட்டும்சட்டம் கொண்டுவரப்பட்டதென்றல், அதுபோலச் சிறுபான்மைமக்களின் நலன்களைச் சரிவரப்பாதுகாப்பதற்கும் அவர் சட்டமொன்றைக் கொண்டுவரத்தான்வேண்டும். பாஷைப்பிரச்சினைக்கு ஓர்நல்லமுடிபு ஏற்படவேண்டுமாயின் தமிழுக்கு மற்றென்றுமல்ல, சம அந்தஸ்தே கொடுத்தாகவேண்டும். மனித உரிமைகளையும், சுதந்திரத்தையும் மதிக்கிறதாயின் தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுத்தேதீரவேண்டும். ஆகவே, பெருஞ்சிக்கலுக்கேதுவான மொழிப்பிரச்சினையிலே ஓர்சமரசமுடிபு காணும்நோக்கமாய்ச் சமஷ்டிக் கட்சித்தலைவர்களுக்கும், பிரதமருக்குமிடையே அன்றுபுதன்கிழமை நல்லசூழலிலே சம்பாஷணை நடைபெறத் தொடங்கியிருப்பதை இலங்கையில் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும், சமூகஒற்றுமையையும் ஆசிப்பாரெல்லாம் வரவேற்றிருப்பது நன்றேயாகும். இந்தப்பிரச்சினைக்குச் சமரசமுடிபு காணுதவரையில் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைமுதலாம்மறுபிரச்சினைகள்தீருவது கஷ்டமேஎன்க.


### உலாந்த கத்தோலிக்ககட்சி

நெதர்லாந்தின்—அதாவது ஒல்லாந்தின் கத்தோலிக்க மக்கள் கட்சியானது அத்தேச பாராளுமன்றத்தின் 150 ஸ்தானங்களிலும் 49 ஸ்தானங்களை வகித்திருக்கின்றது. தற்போது இந்தக்கட்சியில் 4,39,000 அங்கத்தவர்கள் இருந்துவருகின்ருர்கள். சென்ற 1956-ம்ஆண்டின் பாராளுமன்ற தேர்தலிலே அத்தேசத்தின் இரண்டாவது மிகப்பெரிய கட்சியானஇது ஏறக்குறைய இருபது லட்சம்வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. ஒல்லாந்தின் மகாப்பெரிய அரசியற்கட்சி தொழிற்கட்சியேயாகும்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தாலும் பரிசுத்தசதாசகாயமாதாவினதும் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச் தீற்றம்மாள், அர்ச். திரேசம்மாள், அர்ச். பத்தாம்பத்திநாதர், சங். சிஸ். அல்போன்சா, கியோமர்ஆண்டவர் என்பவர்களின் சலுகையாலும் யான்கேட்ட மன்றுட்டுகள் கிடைக்கப்பெற்றேன். பிரசுரிக்கத்தாமதித்ததற்கு மன்னிப்பு இரந்துநிற்கின்றேன். இவர்களின் நாமம்புகழப்படுவதாக.

பாஷையூர் R. G.



# பல தேசங்களில்

### மாலைதீவு விமானத்தளம்

பிரித்தானிய விமானப் படையைச் சேர்ந்த 33அதிகாரிகள் மாலைதீவுகளில் ஒன்ருன கான்தீவிலே பிரித்தானிய விமானத்தளம் ஒன்றைத் தற்போது அமைத்துவருகிருர்கள். பிரித்தானிய—மாலைதீவு அரசாங்கங்கள் சென்ற தைமாதம் செய்துகொண்ட ஓர்உடன்படிக்கையை மேற்கொண்டுதான் இந்த விமானத்தளம் அமைக்கப்படுகிறது. பிரித்தானி, மத்தியகிழக்கு, சிங்கப்பூர் ஆதியாம் நாடுகளிலிருந்தே முன்சொன்ன 33 பிரித்தானிய விமானப் படைஅதிகாரிகளும் அனுப்பிவைக்கப்பட்டார்கள். நிகழும்ஆடிமாதத்திலே அங்கு நடுத்தர விமானங்கள் இறங்கக்கூடியனவாய் இருக்குமென்றும், இலங்கையிலிருந்து விமானப்படைச் சாதனங்கள் அங்கு மாற்றப்படுமென்றும் தெரியவருகிறது.

### பறக்கும் சக்தி

பறவை எப்படிப் பறக்கிறது? இதனை ஆராய்ந்தார் லியனுர்டா டாவின்ஸி என்னும் விஞ்ஞானி. பறக்கும் யந்திரத்தை உருவாக்குவதற்குப் பறவையின் பறக்கும்இரகசியத்தை அவர் பயன்படுத்திக்கொண்டார்.

ஏன்? இன்றுங்கூட நவீனவிமானங்களைக் கட்டுபவர்கள் பறவையின் பறக்கும்தன்மை — பறப்பதில் அதுகையாளும் சிக்கனம் — அது பறக்கும்வேகம் ஆகியவற்றை அப்படியேகொப்பியடிக்க முடியுமானுல், அவர்கள் எவ்வளவோ மகிழ்ச்சியடைவார்கள்.

பறக்கும்போது ஏற்படும் களைப்பைத் தீர்க்கக்கூடியதாகப் பறவையின் இருதயம் மனிதனின் இருதயத்தைக் காட்டிலும் பெரிதாகஇருக்க வேண்டுமல்லவா? பறவையின் இருதயம் மனிதஇருதயத்தைவிட வேகமாக இயங்குகிறது. மனிதஇருதயம் நிமிஷத்துக்கு 72 தடவை அடிக்கிறது. ஆனல், புருவின் இருதயமோ அதைப்போல இருமடங்குஅடிக்கிறது. அதிவேகமாகப் பறக்கும் சிறுகுருவிகளின் இருதயம் நிமிஷத்துக்கு 600தடவைக்குமேல் அடிக்கிறது.

பறவை எப்படிப்பறக்கிறது என்பதை ஆராய்ந்தறிய அதன் எலும்புக்கூடு விஞ்ஞானிகளுக்குப் பெரிதும் உதவுகிறது. அதன்எலும்புகள் குழாய்களைப் போன்றிருக்கும். பறக்கும்போது ஏற்படும்அழுத்தத்தைத் தாங்கக்கூடியதாகச் சின்னஞ்சிறு உறுப்புகள் உடலில் நன்கு இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன. எலும்புப்பூட்டுகளின் இணைப்பும் அதற்குத் தனிப்பலம் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. மண்டைஓடும்கூட எலும்புக்கூட்டத்தால் ஆனதுதான்.

பறவைக்குப் பறக்கும்சக்தியை அளிப்பதற்காகவும், துரிதமாக ஓடும் இரத்தத்தைச் சுத்தம்செய்து, அதன் சூட்டைத் தணிப்பதற்காகவும் ஒரு சிறியகாற்றுப்பை நுரையீரல் இரக்கை வரை நீண்டுள்ளது.

பறக்கும்போது நுரையீரல் அதிக அழுத்தத்திற்கு ஆளாவதைத் தடுக்கும்பொருட்டு வேகமாகப்பறக்கும் குருவிகளின் நாசித்துவாரங்களிலே 'ஸ்கிறீன்'போன்ற ஒருதடை இருக்கிறது.

பறக்கும்போது பறவை ஏராளமான சக்தியைச் செலவிடவேண்டியிருப்பதால், உணவுவிஷயத்தில் அது மனிதனைக்காட்டிலும் அதிகஅக்கறை காட்டுகிறது. தானியங்கள், பழவர்க்கங்கள், சிறுகிருமிகள், மீன் போன்ற போஷணைச்சத்துள்ள உணவுவகை மட்டுமே அதுசாப்பிடுகிறது.

இறக்கைகளுக்குள்ள பறக்கும்சக்தி பறவையின் நெஞ்சிலுள்ள தசைகளிலிருந்தே கிடைக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

### ருஷியாவின் விமானப்பலம்

ருஷிய இராணுவத்தினிடம் சகலவிதமான அணுஆயுதங்களும், ஜெற், றொக்கெற் போர்விமானங்களும், தளபாடங்களும் இருக்கின்றன; இந்த ஆயுதங்கள் எந்த ஆக்கிரமிப்பாளரையும் எதிர்த்து முறியடிக்கும் பலமுள்ளன என்று ருஷிய விமானப்படையின் பிரதம இராணுவஅதிகாரியாயிருந்த மாஷல் சுடெற்ஸ் என்பவர் சென்ற 30-ந் திகதி கொண்டாடப்பட்ட ருஷிய விமானப்படைத் தினத்தை முன்னிட்டுச் "சோவியற் ருஷியா" என்ற தினசரிப்பத்திரிகையில் வெளியிட்ட ஓர்கட்டுரையிலே எழுதியிருக்கின்ருர். மேலும்அவர் குறிப்பிட்டிருப்பதாவது: "யுத்தத்துக்குப்பிறகு ருஷியாவின் தேசீய பொருளாதார விருத்தியில் பிரமாதமானவெற்றி ஏற்பட்டுள்ளதாலும், ருஷிய விஞ்ஞானிகள், எஞ்ஜினியர்களின் அபாரசாதனையினுலும் ருஷியவிமானப்படை உட்பட ருஷியஇராணுவபலம் வெகுவாக அதிகரித்துள்ளது."

### கம்யூனிஸ்தரும் பாகிஸ்தானும்

பாகிஸ்தானிலுள்ள சகல கம்யூனிஸ்தர்களையும் சுற்றிவளைய அந்நாட்டு மத்தியஅரசாங்கம் சகலநடவடிக்கைகளும் எடுத்துவருவதாக அதன்உள்நாட்டுமந்திரி மிங்குலாம் அலிதல்பூர் அறிவித்திருக்கின்ருர். சென்றவெள்ளிக்கிழமை அளித்தபேட்டி ஒன்றில் அவர்பேசியபோது: "கம்யூனிஸ்தர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துவருகிறோம்; தருணம்வரும்போது அவர்களைச் சுற்றிவளைந்துகொள்வோம்; கம்யூனிஸ்தநாடுகளுடன் தொடர்பு வைத்துள்ளவர்கள் யாராயிருந்தாலுஞ் சரி எனதுசொந்தச் சகோதரனுயிருந்தாலுங்கூட விடமாட்டோம்; பாகிஸ்தானில் கம்யூனிஸ்தநடவடிக்கைகள் இருந்துவருவது நிச்சயம்; கம்யூனிஸ்த பிரசாரத்திற்காக இங்குள்ள சில வெளிநாட்டுத் தூதாலயங்கள் ஏராளமாகப் பணஞ்செலவழித்து வருகின்றன" என்றும் அவர் கூறியிருக்கின்ருர்.

* * *

● சென்னை இராச்சியத்திற்குத் "தமிழ்நாடு" என்று பெயரிடுமாறும், அதற்கான நடவடிக்கைகளை விரைவிலே எடுக்குமாறும் சட்டசபையினரையும், அரசினரையும் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்று சென்ற 26-ந் திகதி சென்னையில்முடிவடைந்த தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் நிறைவேறியுள்ளது.

* * *

● அணுக்குண்டுயுத்தம் மூண்டால் மேற்குஜேர்மனி சுடுகாடாக மாறுமென்றும், மேற்குஜேர்மனி அணுக்குண்டு ஆயுதங்களைக் கொண்டிருக்கவேண்டுமென விரும்புகிறவர்கள் ஐக்கியஜேர்மனியை ஸ்தாபிக்கும்லட்சியத்துக்குக் குழிதோண்டுவோராவரென்றும் ருஷியா மீண்டும் அதனை எச்சரித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுரை

முல்லைத்தீவு, கன்னியர்மடப் பாடசாலையில் தற்போது தலைமை ஆசிரியையாகத் தொண்டாற்றும் சங். சிஸ்றர் மொனிக்கா அவர்களின் தாயாரும், காலஞ்சென்ற திரு. பேர்க்மன்ஸ்ஆசிரியரின் பிரியபத்தினியுமாகிய திருமதி பிரகாசியம்மாவின் அந்திம திருச்சடங்கின்போது சமுகமளித்த வண. குருப்பிரசாதிகளுக்கும், சங். சகோதர கன்னியாஸ்திரிமார்களுக்கும், உறவினர் சுற்றத்தவர்களுக்கும், சமுகமளிக்கமுடியாது தூர இடங்களினின்று அனுதாப செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் அன்பர்களுக்கும் சங். சிஸ்றர்அவர்கள் தமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்ருர்.

அவர்கள்சார்பாக S. S.

## கொழும்புத்துறைப் பழையமாணவர் சங்க நிர்வாகசபை

கொழும்புத்துறை, சஞ்சூசையப்பர் தாபன பழையமாணவர்சங்க நிர்வாக சபை 29-6-57 சனிக்கிழமை தாபனத்தில் உபதலைவி அதிசங். தாயார் மரியா அவர்கள்தலைமையில் நடைபெற்றது.

சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பயனடையத்தக்கவகையில் காலப்போக்குக்கேற்றதாக இச்சங்கஒழுங்குகள் திருத்தி அமைக்கப்படவேண்டும்; அவ்வாறு திருத்தி அமைத்தலோடு அமையாது புதுஒழுங்குகளும். புகுத்தப்படவேண்டும்; இதில் அங்கத்தவர்களாய்ப் பலதுறைகளிலும் பதவிவகிக்கும் ஒவ்வொருவரும் இளைப்பாறும்போது ஒருதொகை சேமநிதி பெற்று வளம்பெற வழிவகுக்கும் ஒழுங்குகள் விரைவில் ஆக்கப்படவேண்டும் என்பன போன்ற பலதிருத்தங்களால் இச்சங்கம் பழையமாணவர்களின் கூடிய கவர்ச்சியையும், கவனத்தையும்பெற்று அதிகபலனுள்ள சங்கமாக — எத்தனையோ கருமங்களைச் சாதிக்கும் பலமுள்ளசங்கமாக அமையவேண்டுமென்று ஆசிரியர் பி. அருளானந்தம், ஆசிரியர் எம். வி. ஆசீர்வாதம், பாதுகாவலன் பத்திரிகாசிரியர் என்பவர்கள் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டார்கள். இந்த ஆலோசனைகளை எடுத்தாண்டு ஆவனசெய்யுமாறு ஒருசெயற்குழு நியமிக்கப்பட்டது.

அதன்மேல் வண. சுவாமி எல். ஏ. சிங்காராயர்அவர்களின் வெண்பொன் யூபிலிக் கொண்டாட்டத்தினதும், 26-5-57-இல் நடைபெற்ற பழையமாணவர் சங்க வருடாந்தவிழாக் கொண்டாட்டத்தினதும் வரவு செலவுக்கணக்குகள் ஆராயப்பட்டன. ஈற்றில், காரியதரிசிஅவர்கள்எழுந்து, நிர்வாகசபையார்கொண்டுள்ள விழிப்பான முயற்சியைப் பாராட்டி நன்றிகூறியதும் கூட்டம் கலைந்தது.

## அர்ச். ஞானப்பிரகாசியார் திருநாள்

பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் பூசைப்பரிசாரகர்கள் சென்ற 22-6-57 சனிக்கிழமை தங்கள் பாதுகாவலரான அர்ச். ஞானப்பிரகாசியாரின் திருநாளைப் பழைய அங்கத்தவர்களுடன்சேர்ந்து சிறப்பாகக்கொண்டாடினர். முந்திய மூன்று தினங்களிலும் மாலைஆறு மணிக்குத் திரிதின ஆராதனைகள் கூட்டச் சிற்றாலயத்தில் நடந்தேறின. சனிக்கிழமைகாலை 6-30மணிக்கு மகாவந். ஆர்மென்ட் கிளபோஆண்டவர்அவர்கள் கூட்டத்தின் ஞானத்தலைவர் வண. ஜே. எம். குசரேன் சுவாமியவர்கள் உதவிபுரியத் திவ்விய பூசை நிறைவேற்றி நற்கருணை ஆசீர்வாதமும் அருளினர். அதன்மேல்அங்கத்துவ பத்திரம் வழங்கப்பட்டது. பிற்பகல் 3மணிக்குக் கூட்டத்தலைவர் கூட்டத்துக்கொடியை ஏற்றிவைத்து ஆசனக் கோவிலுக்குமுன்பாகவுள்ள மைதானத்தில் விளையாட்டுப்போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். அதன் முடிவிலே கூட்டச்சாலையில் சிற்றுண்டிஉபசாரணையும்; பரிசளிப்பும்நடந்தேறின. அத்தருணம் டக்றர்ஜே. கிறிசோஸ்ரம், செவாலியர் டக்றர்சென்ஜோண் புவிராசசிங்கி என்பவர்கள் பழையமாணவர்கள் சார்பாகச் சொற்பொழிவாற்றினார்கள். ஞானத்தலைவரும், வண. எல். ஆர். அன்ரனிசுவாமியாரும், வண. பிரான்சிஸ்சேவியர்சுவாமியாரும், கூட்டத்தலைவரும், ஓர்கூட்ட அங்கத்தவரும்முறையே சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பரிசில்களைச் செவாலியர் டக்றர்சென்ஜோண் புவிராசசிங்கி வழங்கினர். ஈற்றில் குருமாரின் ஆசீர்வாதத்துடன் திருநாள்முடிவடைந்தது.

— ஓர்அங்கத்தவன்

## பெற்ருேர் தினம்

சென்ற 24-6-57 திங்கட்கிழமை யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலநாயகிகோவில் விசாரணைப்பங்கு மக்கட்கு ஓர்சுபதினம். அது நம்பங்குக்குரவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளை சுவாமியவர்கள் பெயர்கொண்ட சுபதினம். அவர்தொண்டுகளைப் பாராட்டுந்தினம். அன்னார்க்கு நன்றிகூறுந்தினம். அன்றுகாலை 6மணிக்கு அவரின் பூசைகண்டு தேவனுக்கு நன்றிகூறுமுகமாகப் பாலரும், வாலரும், மற்றேனையோரும் திரண்டுவந்தார்கள். தமது பங்குக்குரவருக்குத் தேவன் இம்மை மறுமைநலன்களை ஈந்தருளுமாறு இரந்துநின்றார்கள்.

பின்னர் 10-30 மணிக்குப் பக்கவாத்தியங்கள் சகிதமாய் மாணவர் மாணவிகள் இருவரிசையாய் அணிவகுத்துச்செல்ல, குரவரைக் குருமனையிலிருந்து ஆடம்பரமாக அழைத்துச்சென்று அலங்கரிக்கப்பெற்றிருந்த உயராசனத்தில் வண. எஸ். கோமெஸ்சுவாமியார் சகிதமாய் அமரச்செய்து, மலர்மாலை சூட்டிப் புகழ்மாலை சாற்றிநின்றார்கள். பாடசாலைப்[illegible]டகர் நல்வரவுகூறும் சோபனகீர்த்தனங்கள் பொதிந்த பாமாலையொன்று எல்லவர்மனங்களையும் கவரத்தக்கவிதமாய் இனிய குரலில் சமர்ப்பித்தனர். அழகிய வேலைப்பாடமைந்த வாழ்த்துப்பத்திரம்ஒன்று வாசிக்கப்பெற்று அன்பளிப்புகளுடன் அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள், மாணவர்களாலும் சுவாமியார்ஆற்றியுள்ள அரும்பெருந்தொண்டுகளெல்லாம் விதந்துகூறப்பட்டன. பின்னர் சுபதினநாயகர்எழுந்து, இந்த வரவேற்புகள் வாழ்த்துகள்எல்லாம் தமக்கல்ல, தமதுபதவிக்கே உரியனவென்றும், பாடசாலைகள்எல்லாம் திருச்சபையின் சுடரொளிகளாக[illegible]திகழவேண்டுமென்றும் பல அறிவுரை[illegible]ள் கூறிநின்றார்.

பிற்பகல் 3 மணி[illegible]குப் பெற்றாரும், மாணவரும் வண. [illegible]பங்குக்குரவரும், வண. ஈ. பொமிக்கோ[illegible]குரவரும் கூடிய சமுகத்திலே வண. ஜே[illegible]ண் மேரிசுவாமியவர்கள் தலைமையிலே கல்வி, ஒழுக்கம், ஞானோபதேசம், [illegible]த்தம், பாடசாலைத்தோட்டம், வி[illegible]பாட்டுகளில் ஏனையபாடசாலைகட்கு ஓர்முதலணியாய்விளங்கும் எம்பாடசாலையின் அறிக்கை வாசிக்கப்பெற்றுத் திறமைகாட்டியமாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதனைத்தொடர்ந்து கற்பின்தியாகி, உள்ளூர், வெளியூர்ப்பானங்களின் ஹாஸ்யமான தர்க்கசம்பாஷணை, மனோரஞ்சிதமான மாணவர்நடனம், பாலர் அபிநயப்பாக்கள் பொதிந்துள்ள சங்கீதவிழாநடைபெற்றது. ஈற்றில் எல்லோரும் ஆனந்தம்பொங்கியமனப்பான்மையுடன் வீடுதிரும்பினர். சுபம்!

— A. S.

# "இன்புளுவென்ஸா"ச் சுரம்

— த. நரசிம்மன் —

"இன்புளுவென்ஸா" விஷசுரம் முதன்முதல் 1918-ம்ஆண்டு புரட்டாசி மாதம் 7-ந்திகதி அமெரிக்காவிலே முதலாவது உலகயுத்தத்தின்போது தோன்றியது. 11 தினங்களில் 600 இராணுவ வீரர்களுக்கும், 13 தினங்களில் 1543 பேருக்கும் அது கண்டது. பிணங்கள் குவிந்து, அவைகள் அடுக்கிஅடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்தச்சுரம் பரவியதில் அமெரிக்காவில் மட்டும் 5,48,452 இராணுவத்தினரும், பிறரும் இறந்தார்கள். மெக்சிக்கோவில் சுமார் 5,00,000 சாவுகள். 44,000 பேர் கனடாதேசத்திற் பலியானார்கள். இந்தவிஷசுரம் ஆபிரிக்கா, ஜப்பான், லபிறடோர் எங்கும்பரவியது. அலஸ்காவில் எஸ்கிமோக்கள்வசிக்கும் கிராமங்களிலுள்ள வயதுவந்தவர்கள் அனைவரும்இதனால்மாண்டார்கள். சில மாதங்களில் அது உலகமெங்கும் பரவி இரண்டுகோடிமக்களின் உயிரைக் கவர்ந்தது. அமெரிக்காவில் இந்தச் சுரத்தின்காரணத்தையே கண்டுபிடிக்க முடியவில்லை. அப்பொழுது நேசதேச சைனியங்கள் ஜேர்மனியின் கடைசி அரண்களைத் தகர்த்துக்கொண்டிருந்தன. விஷக்கிருமிகளை ஜேர்மனியர் பரப்பிவிட்டிருக்க வேண்டுமென்ற பலமான அபிப்பிராயம் அந்தச்சமயம் இருந்துவந்தது. விஷசுரக் கிருமிகள் அமெரிக்காவில் விடப்பட்டிருக்க வேண்டுமென்றும் பிரசாரம்நடந்தது. ஆனால், இது யுத்தபிரசாரமேயாகும். ஏனெனில், அந்தச்சமயத்தில் ஜேர்மனியிலும் இந்த விஷசுரத்தால் 3,00,000 பேர் இறந்தார்கள். தங்கள் போரிலேயே ஜேர்மனியர்கள் கிருமிகளை விட்டுக்கொண்டிருக்க முடியாதல்லவா? இந்தவிஷசுரத்திற்கு ஆதியும் அந்தமும் கிடையாது.

### மூன்றுநாள் சுரம்

இது ஆரம்பத்தில் இலேசாகப் பரவ ஆரம்பித்தது. முக்கியமாய் ஜேர்மனிய, இத்தாலிய, ருஷிய, பிரித்தானிய, அமெரிக்க போர்வீரர்களைத்தான் பாதித்தது. இதற்கு "மூன்றுநாள் சுரம்" என்று பெயர் கொடுக்கப்பட்டது. ஒருவரையும் அப்பொழுது இது கொல்லவில்லை. பிறகுதான் யமனாகமாறிக் கோடிக்கணக்கில் மனித உயிர்களைக் கொள்ளைகொண்டது. ஆனால், இதில் ஒருவிசேஷம் யாதெனில், ஏற்கன்வே இலேசாகச் சுரம் கண்டு சொஸ்தமடைந்தவர்களைப் பின்னால்ஏற்பட்ட கடுமையான சுரம் தாக்கவில்லை.

பின்னால் மூன்றுமாதங்கள் கடுமையாயிருந்தது. அமெரிக்காவில் சவக்குழிகள் தோண்டவும், தாதிவேலை பார்க்கவும் தொண்டர்கள் தேவையென்று அழைக்கப்பட்டார்கள்.

பிலடெல்பியா நகரிலிருந்த டக்றர்மார்களில் கிட்டத்தட்டப் பாதிப்பேர் சுரத்தால் அவதிப்பட்டார்கள். ஆஸ்பத்திரிகளெல்லாம் பார்க்கப் பயங்கரமாய்இருந்தனவென்றும் அப்பொழுது கூறப்பட்டது. சவக் கிடங்குகளில் பிணங்கள் குவிக்கப்பட்டிருந்தன. சிக்காகோ நகரில்மட்டும் ஒருவாரத்தில் 3,200 பேர் இறந்தார்கள். அமெரிக்கா முழுவதும் நாடகக் கொட்டகைகள், பாடசாலைகள்எல்லாம் மூடப்பட்டன. பலமதக்கோவில்களும் மூடப்பட்டன. பலவீடுகள் ஆஸ்பத்திரிகளாக அதிகாரிகளால் மாற்றப்பட்டன.

### முகமூடி

அந்தச் சகாப்தத்தில்தான் "ப்ளூ முகமூடி" ஏற்பட்டது. அமெரிக்கா முழுவதும் ஒரேமுகமூடிதான். முத்தமிட வேண்டுமென்றாற்கூடக் கைக்குட்டையின்மூலந்தான் முத்தங்கொடுக்கப்பட்டது. அவ்வளவு பீதிஇருந்தது. 5 நாட்கள் சுரம்அடிக்கும். ஒன்றுக்கும் குளறுபடி இல்லாமலிருந்தால் சீக்கிரம் குணமாகிவிடும். மத்தியில் நிமோனியா ஏற்பட்டுவிட்டால் ஆபத்துத்தான். அதுமுக்கியமாய்க்கர்ப்பிணிகளை அதிகம்தாக்கியது. ஆகவே, பலவிதங்களில் இரட்டைச்சாவுகள் ஏற்பட்டன. நியூயோக்கில் தற்கொலை 12சதவிகிதம் அதிகரித்தது. பரீசில் 23சதவிகிதம்.

1927-ம்ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து 2,16,42,283 பேர் இறந்தார்களெனத் தெரியவந்தது. இந்தத்தொகையில் 1கோடியே 60லட்சம்பேர் ஆசியாவில் இறந்தார்கள். ஐரோப்பாவில் 20 லட்சத்திற்கு அதிகம்பேர் இறந்தார்கள். ஆபிரிக்காவில் 13 லட்சம். வடஅமெரிக்காவில் 10 லட்சத்திற்குமேல். இலங்கையில் 6லட்சம் பேர் இறந்தார்கள். இரண்டு மகாயுத்தங்களிலும் இறந்தவர்களைக் காட்டிலும் இந்தச்சுரத்தால் அதிகமானபேர் மாண்டார்கள்.

### சோடா மருந்து

சென்னையில் அப்பொழுது இந்தச் சுரம் கடுமையாகயிருந்து பலர்இறந்தார்கள். அப்பொழுது டக்ரர்மார் தினமும் சோடாகுடித்துவந்தால் இந்தச் சுரம் உண்டாகாதென்று கூறியதால் சென்னையில் சோடாகிடைப்பதே கஷ்டமாகிவிட்டது. மயானத்தில் பிணத்தைச்சுட வெகுநேரம் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

இப்பொழுது மறுபடியும் 38 ஆண்டுகள்கழித்து இந்தவிஷசுரம் பரவஆரம்பித்துள்ளது. ஆனால், அப்பொழுது போலன்றி, இப்பொழுது வைத்தியவசதிகள் இருப்பதால் பீதி அடையத் தேவையில்லை. சுகாதாரமுறைகளை நன்குஅனுசரித்துக் கூட்டங்களுக்குப் போகாமலிருந்தால் இந்தச்சுரத்தைத் தடைசெய்துவிடலாம்.


## ஏலவிற்பனவு

மீட்கப்படாத நகைகள்

யாழ்ப்பாணம், பெரியதெரு, நம். 65-இல் அடைவுபிடித்து வருபவரான திரு. அருணசலம் சண்முகம் அவர்களிடம் 1945-ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் வரையில் அடைவுவைக்கப்பட்டுக் குறித்தகாலஎல்லைக்குள் மீட்டுக்கொள்ளப்படாத நகைகளெல்லாம் நிகழும் ஆடிமாதம் 30-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

செ. இரத்தினசபாபதி,
வெந்தீஸ் மேஸ்தர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம், 3-7-1957

**விற்பனைக்கு**

G. C. E. வகுப்பு
மாணவர்களுக்கென
அரசினரால் குறிக்கப்பட்ட
அர்ச். மாற்கு எழுதிய
யேசுக்கிறீஸ்துநாதருடைய
**பரிசுத்த சுவிசேஷம்**

விலை ரூபா 1.25
தபாற்செலவு சதம் 08.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## இருநோக்கமும் இல்லை

"தமிழர்களை எந்தவிதத்திலும் புண்படுத்தும்நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. தமிழர்களின் சுயமரியாதைக்குத் தீங்குசெய்யும்நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை."

பிரதமர் பண்டாரநாயகா

## அந்தநோக்கமும் இல்லை

"நாட்டைப் பிரிக்கும்நோக்கம் சமஷ்டிக்கட்சிக்குக் கிடையாது."

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,
சமஷ்டிக்கட்சிப் பிரமுகர்.

## பிரதமருக்குப் பாராட்டுரை

"கட்டுப்பாடும், பண்பாடும் இல்லாதவர்களைக்கொண்ட ஓர்அரசாங்கத்தைப் பிரதமர் பண்டாரநாயகா கட்டுப்பாட்டுடன் நடத்திவந்தது பெரும்பாரக்காரியம். அதற்காக அவரைப்பாராட்டுகிறேன்."

செனற்றர் ஜஸ்ரின் கொத்தலாவல.

## தமிழிலும் பேசக்கற்பாரா?

"சிம்மாசனப்பிரசங்கத்தைச் சிங்களத்தில் நிகழ்த்துவதற்கு மிகக்குறுகிய காலத்தில் தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்ட கவர்னர்-ஜெனறல் அதைத் தமிழிலும்நிகழ்த்துவதற்குக் கற்றுக்கொள்வாரென நம்புகிறேன்."

செனற்றர் சேர்பிலிப் ரெட்றிக்கோ.

## இருள்சூழ்ந்த அத்தியாயம்

"இந்தப் புத்தஜயந்திவருடத்திலே சகிப்புத்தன்மையும், நல்லெண்ணமும் தழைத்தோங்குமென எதிர்பார்த்தோம். ஆனால், இந்தவருடம் நாட்டின் சரித்திரத்திலேயே ஓர் இருள்சூழ்ந்த அத்தியாயத்தைச் சிருட்டித்துவிட்டது."

செனற்றர் யு. பி. வன்னிநாயகா.

"பெரியதொருநெருக்கடி இப்பொழுது நம்முடையநாட்டை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலே மக்கள்அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும். சிறுபான்மைச் சமூகத்தினரின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்."

திரு. டி. எஸ். மொன்னகுலாமே,
குருநாகல், எம். பி.

## ஒருதலைப்பட்சமான நடவடிக்கை

"நமதுஅரசாங்கம் கடந்தஒருவருடகாலத்திலும் சாதித்ததுஎன்ன? தனிச்சிங்களசட்டத்தை நிறைவேற்றியதுதான். தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்பையும், தமிழ்மொழிக்கும் கௌரவமான அந்தஸ்து வழங்கவேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கையையும் அரசாங்கம் கொஞ்சமேனும் பொருட்படுத்தவில்லை. அதனால்அதன் ஒருதலைப்பட்சமான நடவடிக்கை இந்த நாட்டில் பன்னெடுங்காலமாக இருந்துவந்த ஒற்றுமையைச்சீர்குலைத்து, வகுப்புப்பிரிவினைக்கு வழிகோலிவிட்டது."

செனற்றர் எஸ். நடேசன், கியூ. சி.

## பிரதமரின் நான்குஅம்சத்திட்டம்

"சிங்களம் மட்டும் உத்தியோகமொழியாக்கப் பட்டிருப்பதை நான்வரவேற்கிறேன். ஆனால், தமிழ்மொழியை நியாயமான அளவுக்கு உபயோகிப்பதற்கெனப் பிரதமர்தயாரித்துள்ள நான்குஅம்சத்திட்டம் தமிழ்ப் பேசும்மக்களின் கௌரவத்தையும், சுயமரியாதையையும் பாதிக்காதமுறையில் பிரச்சினையைத்தீர்க்க உதவுமென்றால் அதையும் நான் வரவேற்கிறேன். மொழிப்பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்படுமென்பதே எனதுநம்பிக்கையும், பிரார்த்தனையுமாகும்."

செனற்றர் ச. டபிள்யூ. கன்னங்கரா.

## நாட்டைப்பிரித்தது எது?

"தற்போதைய அரசாங்கந்தான் தனிச்சிங்கள சட்டத்தினால் நாட்டைப் பிரித்திருக்கிறதென்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. பிளவுபட்டுள்ள ஒரு நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய சிறந்தவழிமுறைகளில் சமஷ்டியும்ஒன்று. இன்று தமிழ்ப்பகுதிகளில் சமஷ்டிக்கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கைதான்."

செனற்றர் எஸ். நடேசன், கியூ. சி.

## வீழ்ச்சியடைவது திண்ணம்

"பலநூற்றாண்டுகாலமாகச் சமாதானமும், சௌசன்யமும் நிலவிவந்த இந்தத்தீவில் இன்றுசந்தேகமும், அவநம்பிக்கையும் நிலவிவருவது துக்ககரமாகும். இலங்கையை ஐக்கியப்படுத்துவதில் ஒன்றுசேர்ந்துஉழைத்தநாம் பரஸ்பர நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் முயற்சிக்கவேண்டும். இன்றேல் நாம்வீழ்ச்சியடைவது திண்ணம்."

திரு. ஆர். எஸ். குணவர்த்தன,
அமெரிக்காவில் இலங்கைஸ்தானிகரும்,
ஐக்கிய நாடுகளின்சபையில் இலங்கைப் பிரதிநிதியும்.

## பலவீனமடைந்துவிடாது

"ஜனாப் முஸ்தபா சமஷ்டிக்கட்சியிலிருந்து விலகிக்கொண்டதால் சமஷ்டிக்கட்சி பலவீனமடைந்துவிடாது. கேற்முதலியார் காரியப்பரும், ஜனாப் முஸ்தபாவும் சிங்களமந்திரிகளைத் தங்கள்பகுதிகளுக்கு விஜயஞ்செய்யுமாறு அழைத்தபோது அதை முஸ்லீம்கள் பலமாகஎதிர்த்தார்கள். சமஷ்டிக்கட்சி சாதிமதபேதமற்ற முறையில் தமிழ்மொழிபேசும் எல்லாமக்களது நலன்களுக்காகவும் போராடுகிறதென்பதற்கு இது ஒருசிறந்தஉதாரணம்."

திரு. எஸ். எம். இராசமாணிக்கம்,
முன்னைநாள் பட்டிருப்பு, எம். பி.

## மொழி பிரசாவுரிமைக்கொள்கைகள்

மொழிப்பிரச்சினை மக்களின்கவனத்தை வெகுவாகக்கவர்ந்துள்ளது. நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்னிட்டுச் சமஷ்டிக்கட்சி சத்தியாக்கிரகஞ்செய்ய முடிவுசெய்தது. அதன்மொழிக்கொள்கையையும், பிரசாவுரிமைக் கொள்கையையும் ஆராய்ந்துபார்த்தால் அவைகள் சகலகட்சிகளும் ஒப்புக்கொள்ளக் கூடியவைகளே. இக்கொள்கைகள் ஒருசில தொழிற்சங்கங்களால் ஏற்கனவே வற்புறுத்தப்பட்டுள்ளன. சமஷ்டிக்கட்சியின் போராட்டத்தினால்தான் நியாயமான அளவுதமிழ்உபயோகத்தையேனும் அளிக்க அரசாங்கம் முன்வந்ததென்பதை நாம்உணரவேண்டும்."

ஜனாப் ஏ. அசீஸ்,
இ. தொ. காங்கிரஸ்தலைவர்.

## பிரதமர் விளக்கந்தரவில்லை

"தமிழின் நியாயமான அளவு உபயோகம்பற்றிப் பிரதமர் அடிக்கடி கூறுகின்றார். நியாயமான அளவு உபயோகம்என்றால் என்ன? அதன் எல்லை என்ன? அதன் வரைவிலக்கணந்தான் என்ன? சிங்களம் எவ்வளவுதூரத்துக்கு உத்தியோகபாஷையாய் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது? என்றகேள்விகளுக்குப் பிரதமர் இதுவரை எவ்விதவிளக்கமும் தரவில்லை. சிங்களமொழியானது இந்த நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டுநடத்துவதற்குமட்டும் உபயோகிக்கப்படுமெனில் அதுமட்டும் அரசாங்கமொழியாக இருக்கவேண்டிய அவசியமில்லையே. உண்மையைக்கூறுமிடத்து சிங்களம் மட்டும்சட்டம் தமிழரை இழிவுபடுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட தொன்றாகும்."

செனற்றர் எஸ். நடேசன்

# பிறேக்நகரின் திருக்குழந்தை யேசு

(V. M. Joseph)

பிறேக்நகர திருக்குழந்தையேசு வணக்கம் கார்மேல்சபையாரால் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாக நடத்தப்பட்டு வருகின்றது. உலகெங்கணும் கார்மேல்சபை மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் சபையாரின் கோவில்களிலே ஒருஅடுத்தாராவது, சின்னக் கோவிலாவது குழந்தையேசுவின்பெயரால் இல்லாதிருக்கக்காண்பது மிக அபூர்வம்.

இந்தப்பக்தி பரவியவரலாறு பின்வருமாறு: 16-ம் நூற்றாண்டிலே பொகிமியா நாட்டில் குடியேறிய ஓர் ஸ்பானிய அரசகுமாரத்தி தான் போகும்பொழுது 19 அங்குல உயரமுள்ள அழகுசவுந்தரியம் வாய்ந்த குழந்தையேசுவின் திருச்சுரூபம் ஒன்றையும் தன்னுடன் கொண்டுசென்று பிறேக்நகரிலிருந்த தனது அரண்மனைச் சிற்றாலயத்தில் ஸ்தாபித்து மிகுந்த பக்திவணக்கத்துடன் அதனைப் பக்திசெய்துவந்தாள். அக்கால சம்பிரதாயப்படி விலையுயர்ந்த பட்டாடைகளை மக்கள் அணிவதுவழக்கம். அவ்வாறே இச்சுரூபத்திற்கும் அணிந்து அழகுபார்ப்பது அவளுக்கு மகிழ்ச்சியூட்டுவதாயிருந்தது. பிற்காலத்திலே இந்தச்சுரூபம் பிறேக்நகர கார்மேல்சபைக் குருமார்வசம் ஒப்படைக்கப்படவே, அவர்கள் இதைத் தங்கள் சபையின் பிரத்தியேகமான கோவில்ஒன்றில் வணக்கத்திற்குவைத்தார்கள். சிலகுருமார் — விசேஷமாகச் சிறில்என நாமதேயம் கொண்ட குரவரொருவர் இந்தத்தெய்வீக குழந்தையிலே மிகவும் பக்திவைத்து அவரை வேண்டிக்கொண்டதன்பயனாய் எண்ணிக்கையற்ற சகாயங்களைப் பெற்றனர்.

ஒருநாள் பிறேக்நகரில் பலராலும் நன்கறியப்பெற்ற ஓர்துரைசாணி நோய்வாய்ப்பட்டு அந்தியவேளையை அடுத்திருப்பதைஅறிந்து துயரம்கொண்ட அவள்கணவன் தனது மனைவிக்காக வந்துமன்றாடும்படி கார்மேல்சபைக் குருமாரைக் கேட்டுக்கொண்டான். சிறில்சுவாமியார் போகும்போது தேவஏவுதலினால் தூண்டப்பெற்றவராய்க் குழந்தையேசுவின் திருச்சுரூபத்தையும் தம்முடன் எடுத்துச்சென்று நோயாளியின்மேல் வைத்தார். எல்லோரது எண்ணத்திற்கும் நேர்மாறாகத் துரைசாணி குணமடைந்தாள். இந்த ஆரோக்கியம் அற்புதமானதென்றே தீர்மானிக்கப்பட்டது.

இந்தப்பத்தியுள்ள துரைசாணி தான் அடைந்துகொண்ட அற்புதஆரோக்கியத்துக்கு நன்றியறிதலாகச் சுரூபத்தின்சிரசில் சூட்டுவதற்கென்று தங்கத்தால் செய்யப்பட்ட இராசகிரீடமொன்றைச் சமர்ப்பித்தாள். அதுமுதல் பிறேக்நகரிலே இந்தச்சுரூபம் பெரும் பிரஸ்தாபம்பெற்றது. நகரமாந்தர் அச்சுரூபத்தைக் கார்மேல்சபைப் பகிரங்ககோவிலிலே வைக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். அப்படி வைக்கப்பட்டதும் திருக்குழந்தை யேசுவை மன்றாடினோர் கணக்கற்ற வரங்களைப் பெற்றபடியால் சுரூபம் புதுமையுள்ளதாகக் கருதப்பட்டது. குழந்தையேசுவானவரும் "என்னைஎவ்வளவு அதிகமாக நீங்கள் மகிமைப்படுத்துகிறீர்களோ, நானும் அதிலுமதிகமாக உங்களை ஆசீர்வதிப்பேன்" என்று வசனித்தவாக்கியத்தைச் சிறில்சுவாமியார் அறியாதிருந்திருந்தால் சுரூபத்தைத் தம்முடன் கொண்டுபோயிருக்கமாட்டார்.

### பக்திக்குரிய ஸ்தலங்கள்

சகாயம்பெற்ற மக்கள் வழங்கிய காணிக்கைப்பொருட்கள் கார்மேல் சபையாரின் சிற்றாலயத்தில் குவிந்தன. பெருந்தொகையாக மக்கள் அவ்வாலயத்தைநோக்கிச் சரிந்தவண்ணமிருந்தபடியால் முதலாவதாக ஒருசிறிய கோவிலும், பின்பு பெரியதாகஒரு ஆலயமும் கட்டி எழுப்பவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

குழந்தையேசுவின் பக்தியானது திருச்சபையிலுள்ள மற்றும் புதுமையுள்ள சுரூபங்கள், படங்களுக்கு ஏற்பட்ட பக்தியைப்போலவே ஆரம்பிக்கப்பட்டது. கார்மேல்சபையார் இந்தச்சுரூபத்தின் பிரதிகளைச் செய்து ஐரோப்பாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் தாங்கள்சென்ற நாடுநகரங்களடங்கலும் கொண்டுசென்று குழந்தையேசுவின்பக்தியைப் பரப்பும் கருவிகளாகத் திகழ்ந்தனர்.

பிரான்ஸ்தேசத்திலே போண் நகரத்திலிருக்கும் கார்மேல்சபை மடத்திலே யேசுஇரட்சகரது பாலத்துவ வாழ்க்கையின் பரமஇரகசியத்தின் மட்டில் ஓர்அதிசய பக்திபூண்ட ஆசாரத்துக்குரிய மாகிறேற்எனப்படும் ஓர் பரிசுத்த கன்னியாஸ்திரி இருந்தாள். தாங்கள்நடத்தும் அந்தரங்கவாழ்க்கை காரணமாக இயற்கையாகவே கார்மேல் சபையாருக்கு இப்பேர்ப்பட்ட அதிசயமான பக்தி ஏற்படுகின்றதெனலாம். சங். மாகிறேற் கன்னியாஸ்திரியின் வேண்டுதல்யாவும் தேவ சமுகத்தில் எத்துணை காத்திரம்மிக்கதாய் இருந்ததென்றால், பிரான்ஸ்தேசத்தின் எல்லாப்பாகங்களிலுமிருந்தே அவவுடைய மன்றாட்டையிரந்து அநேகர் வந்தார்கள். தான்பெற்றுக்கொண்ட வரங்கள்யாவும் குழந்தையேசுவின் மூலமாகவே தனக்குக் கிடைத்ததென்று சொல்லி, அவருடைய நன்மாதிரிகைகளை — விசேஷமாக அவர்காட்டிய தாழ்மையையும், பரிசுத்ததனத்தையும் அனுசரித்துவரும்படி எல்லோருக்கும் இக்கன்னியாஸ்திரி புத்திபுகட்டிவந்தாள். குழந்தையேசுவின் பக்தி பரம்ப இக்கன்னியாஸ்திரியின் தொண்டு மிகவும்பயன்பட்டது.

கார்மேல்சபையாரின் பிந்திய அர்ச்சியசிட்டவளான பாலகயேசுவின் சின்னத் தெரேசம்மாளுடைய கீர்த்தியும் இப்பக்தி பரம்பச் சாதகமாயிருந்தது. இந்தஅர்ச்சியசிட்டவள் குழந்தை யேசுவின் விலைமதித்தற்கரிய தெய்வீக பாலத்துவத்தைப்பற்றிப் பூரணமாய் அறிந்தபடியால், அதை உலகிற்கு அதிசயத்திற்குரியவிதமாய் விளங்கப்பண்ணினாள். தானும் பிறேக்நகர குழந்தையேசுவின்மேல் மிகவும் பக்தி வைராக்கியம் நிறைந்தவளாய் விளங்கினாள். லிசியேமடத்துச் சிற்றாலயத்திலிருந்த குழந்தையேசுவின் திருச்சுரூபத்தை அலங்கரிப்பது இவவுடைய கடமைகளிலொன்றாகும். இவவுடைய அன்புள்ளதந்தையார் இவவைச் சந்தோஷப்படுத்தவிரும்பி அச்சிறிய அடுத்தாரை அலங்கரிப்பதற்கு மெழுகுவர்த்திகளையும், நறுமண மலர்களையும் உபகரிப்பார்.

ஆத்மீக அல்லது லௌகீகவரங்கள் உங்கட்குத் தேவைப்பட்டால் — இந்தக்கஷ்டமான காலத்தில் இவ்வரங்கள் யாருக்குத்தான் தேவையில்லை— நீங்களும் சமாதானத்தின் சிறிய இராசாவான குழந்தையேசுவை அண்டிப் போங்கள். அவர் "என்னை எவ்வளவு அதிகமாக மகிமைப்படுத்துகிறீர்களோ, நானும் அதிலுமதிகமாக உங்களை ஆசீர்வதிப்பேன்" என்று வார்த்தைப்பாடு கொடுத்திருக்கிறாரே. தான் கொடுத்த வார்த்தைப்பாட்டை அவர் எப்போதைக்கும் கண்ணியமாகக் காப்பாற்றிவருகிறவரல்லவோ!

---

நன்றாய்ச் செலவிட்ட நாள் முடிவில் இளைப்பாறுவது இன்பம்; அதுபோல் நன்கு செலவழித்த சீவியத்தின்பின் மரணிப்பது இன்பந்தரும்.

— லெயோனட் டா வின்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

பால்த்திமூர் குருமடத்திற்கு வந்த ஒரு வாலிபன் தன்னையும், தன் முயற்சியையும் காணிக்கையாக்கிய பொழுது கர்த்தர் அவருடைய "பேச்சின்படியே அதை ஏற்றுக்கொண்டார்." இப்பொழுது மிக் கேல் ஹறிற்றி "போலியோ" என அறியப்படும் ஓர்வித வாத நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார். நோய் பிடித்திருந்தும் ஒரு தனி வித ஊழியஞ்செய்து வேதத்தைப் பரப்புகிறார். போலியோவுக்குச் சிகிச்சை செய்வதற்காகப் புவலோ வைத்திய கழகத்திலிருக்கிற மிக் கேல் சகோதரர் தன்னைப் பராமரிக்கும் தாதியையும், அவளுடைய ஐந்து பிள்ளைகளையும், ஒருநோயாளியையும் மனந்திருப்பிவிட்டார்.

தான் படுகிற நோவு உபத்திரவமாயிருந்தாலும் மனஞ் சலியாது "எனக்குப் போலியோ வருமுன் நான் எண்ணி இருந்ததிலும் பார்க் கச் சிறப்பானதோர் எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறுகிறார். நத்தையும் அற்பமாய் ஊர்ந்து தேவசித்தத்தை நிறை வேற்றுகிறதன்றோ.

1955-இல் போலியோ நோயாற் பீடிக்கப்பட்டு, நிறைகுறைந்து, நாவழங்காமற் போய், கடும் நெருப்புக் காய்ச்சலிலும் [illegible]ன்று தப்பி யிருக்கிறார். இப்பொழுது நாவழங்குகிறது. அவருடைய வேத விருத்திச் சேவையும் நடந்துவருகிறது.

மிக்கேல் சகோதரர் அதிகமான நேரத்தைச் சில்லுக்கதிரையில் செலவழிக்கிறார். கொஞ்சங் கொஞ்சமாகவே சுவாசிப்பார்.

இவருக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டுகிறவர், போலியோ நோய்பீடித்திருக்கும் வண. கெவின் உவால்ஷ், ஓ.எம். ஐ. சுவாமியார். இவர் தமது சில்லுக்கதிரையில் இருந்து ஒவ்வொருநாளும் அச்சகோ தரர் சமுகத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கிறார்,

"குருவாகுமுன் பலியாகும் பாக்கியம்பெற்ற அபூர்வமான குரு மாணவருள் நீரும் ஒருவர்" எனப் புல்ரன் ஷீன் ஆண்டவர் அவரைப் பாராட்டி எழுதியிருக்கிறார்.

தேவ ஊழியஞ் செய்ய என்ன அவசியங் தேவை என உங்களுக்கு விளங்குகிறதா?

உங்கள் அன்புள்ள,

அண்ணா.

இலக்கியம் 14

## நல்ல மருந்து

மனிதன் தெய்வசாயலையுடையவன். அப்படியிருக்கவும் அவனது தெய்வத்தன்மையைக் காணமுடியாதிருக்கிறது. ஏன்? மனிதத்தன்மையைக்கூட அணுவளவேனும் காண்பது அரிதாகின்றது.

அன்புசெய்யப்பிறந்தவன், ஆறறிவு பெற்றவன், அன்பையும், அறிவையும்இழந்து துன்பத்துக்கும், துயருக்கும், தீமைக்கும் தன் அறிவை முற்றும்செலுத்தி அழிகிறான். அறிவின்முதிர்ச்சியிற்கண்ட விஞ்ஞானம் அணுக்குண்டையும், சலவாயுக்குண்டையும்ஆக்கி உலகைச் சுட்டெரிக்கின்றது.

எத்தனைஎத்தனையோ எண்ணற்ற புதுமைகளைக்கண்டவன் பல்லாயிரம் கலைகளைப்படைத்தவன் சந்திரன் செவ்வாய் மண்டலம்வரையும் சங்கதிகள்பேச முயல்பவன் போரையும், கொலையையும்போக்க ஒருதந்திரம்காணாதிருப்பது எவ்வளவு ஆச்சரியம்.

இப்போரின்கொடுமையால் குஞ்சு குழந்தைகள், பெண்கள், முதியோர், பிணியாளர்யாவரும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்படுகிறார்கள். மக்கள் எல்லோரும் அஞ்சிநடுங்கி ஒதுங்கி வாழவழியின்றி அல்லற்படுகிறார்கள். இந்தக்கோரநிலை மாளவழியில்லையா? மருந்தில்லையா? ஏன் இல்லை. அற்புதமான மருந்து, உலகம் யாவும் ஏற்கும்மருந்து, ஒப்பற்றமருந்து உண்டென்கின்றார் ஆஸ்தானகவிஞர் திரு. இராமலிங்கம்பிள்ளை அவர்கள். அந்தஅமுத சஞ்சீவியை இதோ படியுங்கள்.

இத்தனைத் தீமைக்கும் ஏற்றமருந்து
இந்திய ஞானிகள் கண்டமருந்து
உத்தமர்யாரும் உவக்கும் மருந்து
உலகத்தில் துன்பம் ஒழிக்கும்மருந்து
சத்தியம் சாந்தம் இரண்டுசரக்கைச்
சமனிடை அன்பெனும் தேனில் குழைத்துப்
பத்தியம்தெய்வ நினைப்பொடு உண்டால்
பாருக்குள் பேருக்குப் போரிலைகண்டாய்

உண்மையையும், பொறுமையையும் சமஅளவாக எடுத்து இரண்டு சரக்கையும் அன்பாகிய தேனில் குழைத்துஉண்டுவாருங்கள். பத்தியமாகத் தெய்வநினைப்பு இருக்கட்டும். இவ்வுலகில் போர்என்ற பேரும் நிலைக்காது என்கிறார். ஆகா! இஃது எத்தகைய மகத்தானமருந்து.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

ஒரு கல்லூரியில் வேதநாயகம், வரப்பிரகாசம் என்னும் இருமாணவர்கள் தமிழ்த்தராதரப்பத்திரப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். இருவரும் உத்தமகிறீஸ்துவராக ஒழுகிவந்தனர். வேதநாயகம்தான் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தை மனதில் கொண்டமையால் காலையில்பூசைக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டான். மாலையிலும் செபமாலை சொல்வதை மறந்துவிட்டான். காலையில் பூசைக்குச்சென்று செலவழிக்கும் நேரத்தில் தான்பரீட்சைக்குப் பாடங்களை ஆயத்தம் செய்யலாமென நினைத்தான். மாலையிலும் செபமாலை சொல்லும்நேரத்தை படிப்பதில்தான் செலவழித்தான்.

வேதநாயகம் தனதுபரீட்சையைப் பெரிதாக மதித்ததினால் தன்னைப் படைத்த கடவுளை மறந்தவனானான். வரப்பிரகாசமும் கவனமாகப் படித்துப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனநினைத்தான். அதே நேரத்தில் கடவுளின் உதவியின்றி மனிதனால் எதுவும் செய்யமுடியாதென உணர்ந்தான். 'கடவுளைநம்பினோர் கைவிடப்படார்' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டான். காலையில் பூசைக்குச்செல்லத் தவற மாட்டான். பூசைவேளையில் தேவனிடத்தில் தான்பரீட்சையில் சித்தியடைய அருள்புரியும்படி மன்றாடுவான். அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து திருவிருந்து அருந்துவான். மாலையில் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து குடும்பசெபமாலை சொல்லுவான். தனது பரீட்சையில் சித்தியடைய உதவிசெய்யும்படி தேவதாயை மன்றாடுவான்.

வகுப்பில் வேதநாயகம் வரப்பிரகாசத்திலும்பார்க்கக் கெட்டித்தனம் உடையவனாகக் காணப்பட்டான். வரப்பிரகாசமும் தனது பாடங்களைக் கவனமாகப்படித்துவந்தான். வேதநாயகம் தனது திறமையில் நம்பிக்கை வைத்தான். வரப்பிரகாசம் கடவுளில் நம்பிக்கை வைத்தான். பொன்னானநாட்கள் உருண்டோடின. பரீட்சைக்காலம் நெருங்கிவந்தது, இருவரும் பரீட்சைக்குச்சென்று தமது பரீட்சையைச் செய்து முடித்தனர்.

இருவரும் பரீட்சைமுடிவைக் காத்திருந்தனர். வரப்பிரகாசம் தொடர்ந்து கடவுளிடம் பரீட்சையில் சித்தியடையும்படி மன்றாடிவந்தான். காலையில் பூசைக்குச் செல்வதில் ஊக்கங்காட்டிவந்தான். மாலையில் குடும்பசெபமாலையைத் தொடர்ந்து சொல்லிவந்தான்.

பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவரும்காலம் கிட்டிவிட்டது.

இருவரும் தமது பரீட்சையின் முடிவைக் காண்பதற்கு ஆவலாய் இருந்தனர். பரீட்சையின்முடிவு எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. வேதநாயகமும் வரப்பிரகாசமும் கல்வி பயின்றபாடசாலைக்கும் அறிவிக்கப் பட்டது. இப்பரீட்சையில் வரப்பிரகாசம் திறமையாகச் சித்தியடைந்தான். வேதநாயகம் பரீட்சையில் தோல்வியே கண்டான். வரப்பிரகாசம் பரீட்சையில் சித்தியடைந்ததை அறிந்துகொண்டதும் கோவிலுக்குச்சென்று தேவனுக்கும் தேவதாய்க்கும் நன்றிசெலுத்தினான்.

அன்பர்களே! நாம் ஒரு காரியத்தைச் செய்யத்தொடங்கும்போதே தேவனின் உதவியைப் பெற்றுத் தொடங்கவேண்டும். "அவனின்றி அணுவும் அசையாது." தேவஉதவியின்றி எக்காரியத்தையும் செய்ய முடியாதென்பதை எம்மனதில் இருத்தி எக்காரியத்துக்கும் கடவுளை முன்வைத்துத் தொடங்கவேண்டும்.

V. S. சூசைப்பிள்ளை
அம்பிட்டி.

மாமாவின் கடிதம் 2.

## பிறேக் இல்லாத வண்டி

மருமக்களே!

"கல்வியே கருந்தனம், கல்லாதோர் விலங்குகள் போன்றவர்கள், கற்றோரே கண்ணுடையவர். கல்வி கடலினும்பெரிது, கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே" என்றெல்லாம் கல்வியைப்பற்றிப் பலர் புகழ்ந்துபோற்றினர்; போற்றுகின்றனர்.

ஆனால், திருவள்ளுவர் கடவுள்பக்தியில்லாத கல்வியினால் என்னபிரயோசனம்? என்கிறார். "கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்பது அவரதுபாட்டு. கல்வி மூளையை நிரப்பும்போது கடவுளும் இருதயத்தில் நிறையவேண்டும். கடவுள்பக்தியில்லாதகல்வி பிறேக்இல்லாத மோட்டார்வண்டி போன்றது. பிறேக்இல்லாத மோட்டார் வேகமாய்ஓடினால் ஆபத்தல்லவா? கடவுள்ஞானமற்ற அணுக்குண்டு, சலவாயுக்குண்டுஎன்ற விஞ்ஞானக்கல்வி உலகைப்படுத்தும்பாடு உங்களுக்குத் தெரியும் தானே. ஐயோ எத்துணை அபாயம்!

இதனாற்றான் "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியே" என்று கடவுளைப்பற்றி ஒருபக்தன் பாடினார். கடவுளே கல்விஎன்பது அவரது கருத்து. கல்வியின் முடிவும்பேறும் கடவுளையடைதலே என்பதின்கருத்து உங்கட்கு விளங்குகிறதா? ஆண்டவர்—யேசுபெருமான் பன்னிரண்டு வயதில் ஆலயத்திற்படித்த வேதபண்டிதர்களுடன் வேதக்கல்வியை விவாதித்ததிறமை அவருக்கு எப்படி வந்தது? அந்தக்கல்வி கடவுட்கல்விதான். ஏன்? "படியாத இந்தநசரேயனுக்கு இவ்வளவுஞானம் எங்கிருந்துவந்தது?" என்று ஆண்டவருடைய பிரசங்கத்தைக்கேட்டயூதர் வியந்தனர். ஆண்டவருடைய கல்வியை நாமும்கற்றால் எவ்வளவு பாக்கியசாலிகள்? அதைவிட்டு, பிறேக் இல்லாத மோட்டார்வண்டிகளாக நீங்கள் நாட்டிலே உலாவக்கூடாது பிள்ளைகளே கவனம்!

— முத்துமாமா

### நகைச்சுவை

**டக்றர்:—** (வீட்டில் பிரவேசித்ததும் நோயாளியைப் பார்த்து) ஓ! இன்றைக்கு நீ அதிகம் சுகமுள்ளவனாய்க் காணப்படுகின்றாய்.

**நோயாளி:—** ஆம், சிலவேளை அப்படியிருக்கலாம். ஏனெனில், நீங்கள் மருந்துப்போத்தலில் எழுதிக் கொடுத்திருந்தபடி நான் மெத்தவும் கவனமாய் நடந்துகொண்டேன்.

**டக்றர்:—** (சிறுக யோசித்துவிட்டு) மெத்தநல்லது. மருந்துப் போத்தலிலே அப்படியெல்லாம் என்ன எழுதியிருந்தது? எடுத்துவந்து காட்டுபார்க்கலாம்.

**நோயாளி:—** இதோ பாருங்கள்! போத்தலை நன்றாய்அடைத்து வைத்துக்கொள்ளென்று எழுதியிருக்கிறது. அப்படியே செய்திருக்கின்றேன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். அருளப்பரும் ஓர்ஞானியும்

அருமைச்சீஷனும், யேசுநாதருடையசிநேகிதனுமான அருளப்பரை உங்களுக்குத் தெரியுமல்லவா? கிறீஸ்துநாதர் மரணித்தபின் அவர் ஆசியாவிற்குச்சென்று அநேகசனங்களை மனந்திருப்பினர். பொல்லாத சக்கிரவர்த்தியான தொமிசியன் அவரை ரூேமைக்கு அழைத்து, கொதிக்கும் எண்ணெய்நிறைந்த கடாரத்தினுள் அவரையிட்டான். அதனுல் அருளப்பருக்கு ஒருகெடுதியும் வரவில்லை. அதைக்கண்ட அரசன்கோபங்கொண்டு மனிதசஞ்சாரமற்ற ஓர்வனுந்தரத்திற் சீவிக்கும்படி அவரைஅனுப்பிவிட்டான். சொற்பகாலத்துள் அக்கொடுங்கோலன் இறந்துபோக, அர்ச். அருளப்பர் தம்முடைய ஊருக்குத் திரும்பினர்.

பின்வரும்சம்பவம் அவர்எபேசுபட்டினத்துக்குவந்த அடுத்தநாள் நடந்தது.

எபேசுபட்டினத்தின் ஒருசந்தியில் சனங்கள்கும்பலாய்க் கூடிநின்றுர்கள். ஒருவரையொருவர் தள்ளிநெரித்துக்கொண்டு நின்ருர்கள். அதினுல் ஏதும்விபத்து நேர்ந்ததா? இல்லை. ஏனெனில், அக்காலத்தில் மோட்டர்கார்கள் திரும்வண்டிகள் சைக்கிள்கள் இருக்கவில்லை.

அவ்வழியாய்வந்த அருளப்பர் அங்குநின்ற ஒருவனைப்பார்த்து, "சனங்கள்எல்லோரும் ஏதோ ஒன்றைக் காத்திருப்பவர்கள்போல் காணப்படுகிறதே, யாரைக்காத்து நிற்கிருர்கள்" என்றுகேட்டார். "கிராத்தோன்என்ற பெரியஞானி சனங்களை இங்குஅழைத்திருக்கிருர்" என்றுமறுமொழிசொன்னுன். ஞானி என்ருல் சாதாரண மனிதரிலும் மேலான அறிவுடையவன். ஆனுல், சிலஞானிகள் ஆங்காரம் நிறைந்துபோய்த் தங்களைப் பெருமைப்படுத்தத் தேடினுர்களேயல்லாமல், தங்கள் புத்திபோதனையாற் சருவேசுரனைப் பிரியப்படுத்தத்தேடவில்லை.

அந்நேரம் கிராத்தோன் வந்துகொண்டிருந்தான். அவனுடைய பார்வையில் இறுமாப்பு நிறைந்திருந்தது. அவனுடன்கூட அநேக கட்டுமஸ்தான தேகமுள்ளவாலிபர் குருவிக்குவிந்த முகத்துடன்வந்தார்கள். கிராத்தோன் சனங்களை ஏற இறங்கப்பார்த்தான். "சனங்களே! செல்வங்களை இகழும்படி படிப்பிக்க உங்களை இங்கு அழைத்தேன்" என்ருன்.

செல்வங்களை இகழுவதா? அது மிகவும்எளிதானபேச்சு. ஆயின் எத்தனைஅடிமைகள் பணமிருந்தால் விடுதலைபெறலாம் என்று எண்ணுகிருர்கள். பணமிருந்தால் நான் சீக்கிரம்விவாகஞ்செய்ய முடியுமே என்று நினைக்கிருள் ஒருமங்கை. காசுஇருந்தால் நல்லமருந்துவாங்கி அப்பிள்ளையின் வருத்தத்தைச் சுகமாக்கிவிடலாமேஎன்று ஏங்குகிருள் ஒருகிழவி.

தன்னைச்சூழவிருந்த துன்பதுயரங்களை அற்பமேனும் கவனியாமல் கிராத்தோன் சொல்லுவான்: இந்த இருஇளைஞரையும் பாருங்கள், இவர்கள் உங்களுக்கு முன்மாதிரி. அவர்களிடமுள்ள யாவற்றையும் விற்றுவிடும்படி கட்டளைகொடுத்திருக்கிறேன். அவர்கள் திரவியங்கள் நிறைந்தமாளிகைகளை — உலகசெல்வங்களை இகழுவது பெரிதல்ல; அவைகளை வறியவர்களுக்குக் கொடுப்பதே பலன்நிறைந்தது.

ஞானிமனதிற் கிலேசமுற்ருன். தன்அகங்காரத்தைக்காட்ட அவன் விரும்பவில்லை. ஆயினும் அருளப்பரை அவமதிக்கஎண்ணி: உன்னுடைய குருஉண்மையான தேவனுயிருந்தால், இந்தமாணிக்கக்கற்களின் விலை ஏழைகளுக்குக் கொடுபடவேண்டுமென்று அவர் விரும்பினுல் தூளாய்ப்போன மாணிக்கங்களை முன்னிருந்ததுபோல ஒன்ருகச்செய்யட்டும்; ஏனெனில், இந்தத்தூள் ஒருசல்லியும்பெருது. ஞானியின் சீஷர்கள் தங்களுக்குள் இரகசியமாய்க் கதைத்துத் தலையாட்டினுர்கள். ஏனெனில், தூளாய்ப்போன இரத்தினக்கற்களை ஒட்டமுடியாதென அவர்கள் எண்ணிக்கொண்டார்கள்.

கூடநின்றஇளைஞர்கள் அர்ச்சியசிட்டரைப்பார்த்து, "உலகபுகழை நாங்கள் விரும்பினேம்; நீரோஉமது குருவின்மகிமைக்காக இதைச்செய்யவேண்டும்" என்றுகேட்டார்கள். அப்பொழுது அர்ச். அருளப்பர் உடைந்தமாணிக்கத் தூள்களைத் தமது கையிலெடுத்து வானத்தை அண்ணுந்து பார்த்தார்; ஆ! அதிசயமே, முன்னிருந்ததுபோல் அவை முழுஇரத்தினக் கற்களாயின.

ஞானியும் அவனுடன்கூடநின்ற வாலிபரும் அருளப்பருடைய பாதத்தில்வீழ்ந்து, "இவ்வளவு வல்லபம் பொருந்திய யேசுநாதரை நாங்கள் விசுவசிக்கிருேம்" என்ருர்கள். சனங்கள் எல்லோரும் ஆச்சரியவசத்தரானுர்கள். அருளப்பர் அவர்களைப் பார்த்து, "மாணிக்கங்களின் விலையை ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுங்கள்" என்ருர்.

அப்பொழுது அடிமையின்முகத்தில் நம்பிக்கைபூத்தது; தன்மகளுக்குத் தேவையான நல்லமருந்து வாங்கலாமென்று கிழவியின்மனம் சந்தோஷத்தால் நிரம்பியது.

**படிப்பினை:** பிள்ளைகளே! உங்களிடம் அநேக விளையாட்டுப்பொருட்கள் இருந்தால் அவைகளை உடைத்து அழிக்காதேயுங்கள்; அவைகளிற் சிலவற்றை வறிய பிள்ளைகளுக்குக்கொடுங்கள்.






## அர்ச். சதாசகாயமாதா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது உலகின் பலபாகங்களிலிருந்தும் "அர்ச். சதாசகாய மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" எனும் வேண்டுகோளை அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனையில் சேர்க்கவேண்டுமெனக்கோரிப் பரிசுத்தபாப்பரசருக்குக் கடிதம்அனுப்புகின்றனர். இதிலிருந்து சதாசகாய மாதாவின்பக்தி நன்குபரந்துள்ளதென்பது விளங்குகிறது.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**அர்ச். அந்தோனியார் திருநாள்:** மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா ஆலயப்பங்கில் 24-6-57ஞாயிறுவாரம் அர்ச். அந்தோனியார்திருநாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருநாளன்றுகாலை 6மணிக்குப் பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ், ஈ. எல். வம்பேக்சுவாமி அவர்களால் பாடற்பூசைநிறைவேறியது. அன்று பி. ப. 6-00மணிக்கு அர்ச். அந்தோனியாரின்திருச்சுரூபம் சர்வாலங்கிர்தமாய் எழுந்தருளச்செய்யப்பெற்றுச் சுற்றுப்பிரகாரமாய்க்கோவிலைவலம்வந்தது. சுற்றுப்பிரகாரவேளையில் விசுவாசிகள் தேவகீதங்கள்பாடியும், செபமாலை, பிரார்த்தனைஓதியும் தங்கள்பக்திப்பெருக்கைக் காண்பித்தனர். அந்தோனிஎனும் நாமம்பூண்ட பக்தர்கள் அனைவரும் அர்ச்சியசிட்டர்மேல் தங்களுக்குள்ள பக்தியைத்தெரிவித்துக்கொள்ளுமுகமாகத்தங்கள்உபயத்திலே இவ்வைபவங்களை நடத்தினுர்கள். பின்னர் பி. ப. 6-30மணியளவில் சுவாமிகளால் மாலைஆராதனை பாடப்பெற்றுத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதேமுடிவுற்றது.

**திருஇருதயத்திருநாள்:** இவ்வாலய பங்கைச்சேர்ந்த விசுவாசிகள் இம்முறை யேசுவின்திருஇருதயத்திருநாளை 27-6-57-இல் பயபக்தியாகக் கொண்டாடினர். திருநாளுக்குமுந்திய 25, 26-ம்திகதிகளில் மாலை ஆராதனைபாடிப் பங்குவிசாரணைக்குரவரால்பிரசங்கமும் செய்யப்பெற்றது. திருநாளுக்குமுதனுள்மாலை 6-30மணியளவில் பங்குக்குரவர், வண. ஏ. அலோசிங், வண. சைமன்பொன்னண்டோஎனும் குருப்பிரசாதிகளால் மாலை ஆராதனை பாடப்பெற்றதும் சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. விழாவன்றுகாலை புளியந்தீவுப்பங்குக்குரவர் வண. ரி. ஆறன்ஸ்சுவாமிகளால் நமதுபங்குக்குரவரும், வண. எல். அல்பகுககுரவரும் துணைபுரியப் பாடற்பூசை நிறைவேறியது. பூசைவேளை அநேகவிசுவாசிகள் தேவவிருந்தருந்தினர். பூசைக்குப்பின் நாள்முழுவதும் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பெற்றுப் பத்திச்சபையினராலும், பாடசாலைப்பிள்ளைகளாலும், விசுவாசிகளாலும் இடையருது சந்திக்கப்பெற்று, மாலை 5மணிக்கு நிந்தைப்பரிகாரச்செபமும், திருஇருதயப்பிரார்த்தனையும் சொல்லப்பட்டபின் திவ்வியநற்கருணைஆசீர்வாதம் வழங்கப்படலாயிற்று.

**பூசைப்பரிசாரகரின் பக்திச்சபைத்திருநாள்:** இப்பக்திச்சபையின் பாதுகாவலரான அர்ச். ஞானப்பிரகாசியாரின் திருநாளைமுன்னிட்டு இம்மாதம்30-ந்திகதி பங்குஆலயத்தில் பங்குவிசாரணைக்குரவரால் மாலையாராதனைபாடப்பெற்றது. 1-7-57விழாவன்றுகாலை பங்குக்குரவரால் பாடற்பூசை நிறைவேறியது. பின்னர் அர்ச்சியசிட்டரின் திருப்பண்டம் முத்திசெய்யக் கொடுபட்டுத் திருநாள் இனிதே முடிவெய்தியது.

✝

திரு. ம. சவரிமுத்து அவர்களின்
இரண்டாம் வருட


## மரணஞாபகம்

**மறைவு: 9-7-55**

நித்தியஇளைப்பாற்றியை இவருக்குக் கொடுத்தருளும் சுவாமி, முடிவில்லாதபிரகாசம் இவருக்குக் கட்டளையிட்டருளும். இவ்வாத்தும இளைப்பாற்றிக்காகக் கிறீஸ்துவகருணையோடு தலயகூர்ந்து வேண்டிக்கொள்ளுங்கள்.

மனைவி, மகள்

இறைம்பைக்குளம்,
வவுனியா



7-ம் வருட

## மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 25—12—1927 | 5—7—1950 |

எனது அருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள்மறைந்து இன்ருேடு (5-7-57) ஏழுஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவி பயந்த மணியெட் டிலையோவெம்
ஆவித் துரைய னணைந்திட்டால்—பூவில்
மறவோ ரறவோருற் ருரைக் கெஞ்சிற்றேம்
துறவா துதவு மவற்கு.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிருேம்.

"நித்திய இளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளும்சுவாமி... சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவர் பிரிவால் துயருறும்

தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை.
பாரியார்: ஸ்ரீமதி செ. துரைரத்தினம்

சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்றர் மேரிலுமினு (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதாவினதும், அர்ச். அந்தோனியாரினதும் அனுக்கிரகத்தினுல் நான்கேட்டுக்கொண்ட காரியங்கள் அனுகூலமாயின. இன்னும் எனது கோரிக்கைகள் பூர்த்தியாகும்படி பிரார்த்திக்கிறேன். மாதாபக்தன்

* * *

யேசுவின் திருஇருதயஇரக்கத்தினுலும், கொச்சிக்கடை, அர்ச். அந்தோனியாரின் அற்புதத்தினுலும் எனதுமகளின் காலில்உண்டான வருத்தம் கேட்டுக்கொண்டபடி குணம்அடைந்தது. இன்னும் பூரணசுகம்கிடைக்குமாறுவேண்டி நன்றியைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
கொழும்பு ஓர்பக்தன்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 4-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org